


ISSN: 2582–5518

புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM | VARALARUU | PUDUGAIVARALARU | VARALARUU | 7502051351




புதன் ❖ பிப்ரவரி. 21, 2024 | சென்னை & புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 134 ❖ ரூ.10

## ஜம்மு காஷ்மீரில் ரூ. 32,000 கோடி மதிப்பிலான திட்டங்கள்

# துவக்கம்

### வளர்ச்சியடைந்த ஜம்மு திட்டத்தின் ஒரு பகுதியாக பல்வேறு அரசுத் திட்டங்களின் பயனாளிகளுடன் பிரதமர் மோடி கலந்துரையாடினார்

ஜம்மு : பிப். 21-

**ஜம்மு காஷ்மீரில் ரூ.32,000 கோடி மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைப் பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார். மேலும், பல்வேறு திட்டங்களுக்கு அவர் அடிக்கல் நாட்டினார்.**



ஜம்முவில் உள்ள மவுலானா ஆசாத் மைதானத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற பிரதமர் நரேந்திர மோடி, ரூ. 32,000 கோடிக்கும் அதிக மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை தொடங்கி வைத்து, நாட்டுக்கு அர்ப்பணித்து, அடிக்கல் நாட்டினார். மேலும், ஜம்மு காஷ்மீரில் புதிதாகத் தேர்வு செய்யப்பட்ட சுமார் 1,500 பேருக்கு பணி நியமன ஆணைகளைப் பிரதமர் வழங்கினார். 'வளர்ச்சியடைந்த பாரதம் வளர்ச்சியடைந்த ஜம்மு' திட்டத்தின் ஒரு பகுதியாக பல்வேறு அரசுத் திட்டங்களின் பயனாளிகளுடனும் பிரதமர் கலந்துரையாடினார்.

நாடு முழுவதும் கல்வி மற்றும் திறன் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதில் குறிப்பிடத்தக்க நடவடிக்கையாக, சுமார் ரூ.13,375 கோடி மதிப்பிலான பல்வேறு திட்டங்களுக்கு பிரதமர் அடிக்கல் நாட்டி, நாட்டுக்கு அர்ப்பணித்து, தொடங்கி வைத்தார். ஐஐடி பிலாய், ஐஐடி திருப்பதி, ஐஐடி ஜம்மு, ஐஐடிடிஎம் கர்னூல், கான்பூரில் உள்ள இந்திய திறன் நிறுவனம் (ஐஐஎஸ்), மத்திய சமஸ்கிருத பல்கலைக்கழகத்தின் இரண்டு நிரந்தர வளாகங்கள் - தேவ்பிரயாக் (உத்தராகண்ட்) மற்றும் அகர்தலாவில் (திரிபுரா) ஆகிய முக்கிய கல்வி நிறுவனங்களின் வளாகங்கள் தொடங்கப்பட்டு நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டன.

ஐஐஎம் ஜம்மு மற்றும் ஐஐஎம் புத்த கயா, ஐஐஎம் விசாகப்பட்டினம் ஆகிய மூன்று ஐஐஎம் வளாகங்களை பிரதமர் தொடங்கிவைத்தார். நாடு முழுவதும் 5 கேந்திர வித்யாலயா வளாகங்கள், ஒரு நவோதயா வித்யாலயா வளாகம் மற்றும் நவோதயா வித்யாலயாவுக்கான 5 பன்னோக்கு அறைகள் ஆகியவற்றுக்கும் பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார்.

ஜம்மு காஷ்மீர் மக்களுக்கு விரிவான, தரமான, முழுமையான மருத்துவ சேவைகளை வழங்கும் நடவடிக்கையாக, ஜம்முவின் விஜய்பூர் (சம்பா) பகுதியில் அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனத்தைப் பிரதமர் திறந்து வைத்தார். ரூ. 1660 கோடிக்கும் அதிகமான செலவில் 227 ஏக்கர் பரப்பளவில் நிறுவப்பட்ட இந்த மருத்துவமனை, 720 படுக்கைகள், 125 இருக்கைகளுடன் மருத்துவக் கல்லூரி, 60 இருக்கைகளுடன் செவிலியர் கல்லூரி, 30 படுக்கைகள் கொண்ட ஆயுஷ் பிரிவு, ஆசிரியர்கள், ஊழியர்களுக்கான குடியிருப்பு வசதிகள், இளங்கலை, முதுகலை மாணவர்களுக்கான விடுதி தங்குமிடம், இரவு தங்குமிட வசதி, விருந்தினர் இல்லம், அரங்கம், வணிக வளாகம் போன்றவை இடம்பெற்றுள்ளன.

ஜம்முவையும், கத்ராவையும் இணைக்கும் தில்லி-அமிர்தசரஸ்-கத்ரா விரைவுச் சாலையின் இரண்டு தொகுப்புகள் (44.22 கிலோமீட்டர்) உள்ளிட்ட முக்கிய சாலைத் திட்டங்களுக்குப் பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார்.

ஜம்முவில் பொதுப் பயன்பாட்டு பெட்ரோலிய கிடங்கு வசதியை உருவாக்கும் திட்டத்திற்கு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார். சுமார் ரூ. 677 கோடி செலவில் உருவாக்கப்படவுள்ள இந்த அதிநவீன தானியங்கி கிடங்கு, மோட்டார் ஸ்பிரிட், அதிவேக டீசல், சுப்பீரியர் மண்ணெண்ணெய், விமான டர்பைன் எரிபொருள், எத்தனால், பயோ டீசல், குளிர்கால தர அதிவேக டீசல் ஆகியவற்றை சேமிப்பதற்காக சுமார் 100,000 கிலோ லிட்டர் சேமிப்பு திறன் கொண்டதாக இருக்கும்.

ஜம்மு-காஷ்மீர் முழுவதும் குடிமை உள்கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கும், பொது வசதிகளை வழங்குவதற்கும் ரூ. 3150 கோடிக்கும் அதிகமான மதிப்புடைய பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை பிரதமர் தொடங்கி வைத்தார். சாலை திட்டங்கள், பாலங்கள், கிரிட் கட்டமைப்பு நிலையங்கள், பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், பல பட்டப்படிப்பு கல்லூரி கட்டிடங்கள், ஸ்ரீநகரில் நுண்ணறிவு போக்குவரத்து மேலாண்மை அமைப்பு, நவீன நர்வால் பழ மண்டி, கத்துவாவில் மருந்து சோதனை ஆய்வகம் மற்றும் போக்குவரத்து தங்குமிடம் கந்தர்பால், குப்வாராவில் 224 குடியிருப்புகள் ஆகியவை இதில் அடங்கும். ஜம்மு-காஷ்மீர் முழுவதும் ஐந்து புதிய தொழிற்பேட்டைகள், ஜம்மு பொலிவுறு நகரத் திட்டத்தின் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்திற்கான தரவு மையம் / பேரிடர் மீட்பு மையம்,ஸ்ரீ நகரின் பரிம்போராவில் போக்குவரத்து நகர் மேம்பாடு, அனந்த்நாக், குல்காம், குப்வாரா, ஷோபியான், புல்வாமா மாவட்டங்களில் ஒன்பது இடங்களில் 62 சாலை திட்டங்கள், 42 பாலங்கள், போக்குவரத்துதங்குமிடங்களை மேம்படுத்துவதற்கான திட்டம் - 2816 குடியிருப்புகள் ஆகியவற்றுக்கு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார்.






# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்

"உங்களுக்குள் நீங்கள் நல்ல சமநிலையுடன் இருக்கும்போது மட்டும்தான், உங்கள் புத்திசாலித்தனம், திறமை மற்றும் ஆற்றல் முழுமையாக வெளிப்படும்."




# 'எம்எஸ்பி குழப்பத்தைப் பரப்புவோர் எம்.எஸ்.சுவாமிநாதனை அவமதிக்கிறார்கள்' – ராகுல் சாடல்



புதுடெல்லி : பிப். 21-

விவசாயிகள் போராட்டம் தொடர்பாக பாஜக தலைமையிலான மத்திய அரசை சாடியுள்ள காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி, "பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை குறித்து குழப்பத்தை பரப்புகிறவர்கள், பசுமைப் புரட்சி தந்தை பாரத ரத்னா டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதனை அவமதிக்கிறார்கள்" என்று குற்றம்சாட்டியுள்ளார்.

பருப்பு வகைகள், மக்காச்சோளம், பருத்தியை அரசு நிறுவனங்கள் மூலம் குறைந்தபட்ச ஆதரவுவிலையில் ஐந்து ஆண்டுகளுக்கு வாங்கும் மத்திய அரசின் முன்மொழிவை விவசாயிகள் மறுத்துள்ள நிலையில் ராகுல் காந்தியின் இந்த கருத்து வெளியாகியுள்ளது. இதுகுறித்து காங்கிரஸ் முக்கியத் தலைவர் ராகுல் காந்தி தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "எம்எஸ்பி-க்கு சட்டப்பூர்வ உத்தரவாதம் வழங்கப்படும் என்று காங்கிரஸ் அறிவித்ததில் இருந்து, மோடியின் கொள்கை பரப்பு அமைப்புகள் மற்றும் ஆதரவு ஊடகங்கள் எம்எஸ்பி குறித்து பொய்யான தகவல்களை பரப்புகின்றன. அதாவது, இந்தியாவின் பட்ஜெட்டில் குறைந்த பட்ச ஆதரவு விலைக்கு சட்டப்பூர்வ அங்கீகாரம் வழங்குவது சாத்தியம் இல்லை என்று பொய்யைப் பரப்புகின்றன.

உண்மைஎன்னவென்றால், சிஆர்ஐஎஸ்ஐஎல்-ன் படி 2022 – 23ல் அரசு, விவசாயிகளுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை வழங்கி இருந்தால் கூடுதலாக ரூ.21,000 கோடி செலவாகியிருக்கும். இது மொத்த பட்ஜெட்டில் 0.4 சதவீதமாகும். ரூ.14 லட்சம் கோடி கடன் தள்ளுபடி செய்யும் நாட்டில், ரூ.1.8 லட்சம் கோடி கார்ப்பரேட் வரிகள் ரத்து செய்யப்படும் நாட்டில், விவசாயிகளுக்கு மட்டும் சிறிய அளவு தொகையை செலவு செய்ய கண்ணீர்விடுவது ஏன்?.

எம்எஸ்பிக்கான உத்தரவாதம் விவசாயத்தில் முதலீட்டை அதிகரிக்கும், கிராமப்புற இந்தியாவின் தேவையை அதிகரிக்கும், பல்வேறு வகையான பயிர்களை வளர்ப்பதற்கான நம்பிக்கையை விவசாயிகளுக்கு தரும். இது நாட்டின் வளர்ச்சிக்கு உத்தரவாதம் அளிக்கும்.

குறைந்தபட்ச ஆதரவு விலை குறித்து குழப்பத்தை பரப்புகிறவர்கள் டாக்டர் சுவாமிநாதனை அவமதிக்கிறார்கள். எம்எஸ்பிக்கான உத்தரவாதம் என்பது, விவசாயிகளை பட்ஜெட்டின் சுமையாக மாற்றாது. மாறாக அவர்களை ஜிடிபி வளர்ச்சிக்கு பங்களிப்பவர்களாக மாற்றும்." என்று ராகுல் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரத்தில் காங்கிரஸ் வெற்றி பெற்று மத்தியில் ஆட்சிக்கு வந்தால் குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு சட்டப்பூர்வ உத்தரவாதம் அளிக்கப்படும் என்று ராகுல் காந்தி தெரிவித்திருந்தார். என்றாலும் கடந்த 2010-ம் ஆண்டு காங்கிரஸ் தலைமையிலான யுபிஏ அரசு சுவாமிநாதன் கமிஷனின் பரிந்துரைகளை நிராகரித்தது. 2010-ம் ஆண்டு சுவாமிநாதன் கமிஷன் பரிந்துரை நிராகரிக்கப்பட்டது குறித்த கேள்விக்கு பதில் அளித்த காங்கிரஸின் பவன கெரா, சுவாமிநாதனின் 201 பரிந்துரைகளில் 175 ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவித்திருந்தார்.

# "சந்தேஷ்காலியில் நிலைமை பயங்கரம்" – நேரில் பார்வையிட்ட பாஜக மூத்த தலைவர் சுவேந்து அதிர்ச்சி



சந்தேஷ்காலி : பிப். 21-

மேற்கு வங்கத்தின் வடக்கு 24 பர்கானாஸ் மாவட்டத்தில் உள்ள சந்தேஷ்காலிக்குச் சென்று பார்வையிட்ட பாஜக மூத்த தலைவர் சுவேந்து அதிகாரி, நிலைமை மிக மிக மோசமாக உள்ளது என்றும், சட்டம் - ஒழுங்கு முற்றிலுமாக இல்லை என்றும் கூறினார்.

ஆளும் திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் நிர்வாகி ஷாஜகான் ஷேக் மற்றும் அவரது ஆதரவாளர்கள் சந்தேஷ்காலியில் நில அபகரிப்பில் ஈடுபட்டதாகவும், பெண்களை பாலியல் வன்கொடுமை செய்து துன்புறுத்தியதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இது தொடர்பாக விசாரணை நடத்திய தேசிய பட்டியலினத்தோர் (எஸ்சி) ஆணைய பிரதிநிதிகள் குழு, குடியரசுத் தலைவரிடம் அறிக்கை சமர்ப்பித்துள்ளது. தலைமறைவான ஷாஜகான் ஷேக்கை கைது செய்ய வலியுறுத்தி அங்கு தொடர் போராட்டம் நடைபெறுவதால் அமைதியற்ற சூழல் நிலவுகிறது.

இந்நிலையில், பாஜக மூத்த தலைவர் சுவேத்து அதிகாரி, சந்தேஷ்காலிக்கு செல்ல முயன்றார். தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதை காரணம் காட்டி அவர் செல்வதற்கு போலீசார் தடை விதித்தனர். இதையடுத்து, கொல்கத்தா உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்ற சுவேந்து அதிகாரி நேற்று சந்தேஷ்காலி சென்றார். அவருடன் பாஜக எம்எல்ஏ சங்கர் கோஷ் உள்ளிட்டோர் சென்றனர்.

சந்தேஷ்காலியில் வசிக்கும் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்த பாஜக தலைவர்கள், அவர்களுக்கு நேர்ந்த பாதிப்புகள் குறித்து கேட்டறிந்தனர். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சுவேந்து அதிகாரி, "திரிணமூல் காங்கிரஸ் நிர்வாகிகளால் ஏற்பட்ட பாதிப்பு குறித்து மக்கள் கூறியவை அதிர்ச்சிகரமானவை. உடலை நடுங்கச் செய்பவை. உள்ளூர் மக்களின் நிலங்கள் அபகரிக்கப்பட்டுள்ளன.

சந்தேஷ்காலியில் பெண்கள் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். அனைத்தும் காவல்துறை மற்றும் நிர்வாகத்தின் உதவியுடன் நடந்துள்ளது. நிலைமை முற்றிலும் பயங்கரமானது. அராஜகத்துக்கனா மிக மோசமான உதாரணம் இது. சட்டம் - ஒழுங்கு முற்றிலுமாக இல்லாத நிலை உள்ளது" என்று தெரிவித்தார்.

# செந்தில் பாலாஜி வழக்கு : அமலாக்கத் துறை பதிலளிக்க கோர்ட் உத்தரவு



சென்னை : பிப்.21

சட்ட விரோத பணப் பரிமாற்ற தடைச் சட்ட வழக்கில் இருந்து விடுவிக்கக் கோரி முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி தாக்கல் செய்த மனுவுக்கு அமலாக்கத் துறை பதிலளிக்க சென்னை மாவட்ட மூன்றாவது கூடுதல் அமர்வு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி, சட்டவிரோத பணப்பரிமாற்ற தடைச் சட்ட வழக்கில் 2023 ஜூன் 14-ல் அமலாக்கத் துறையால் கைது செய்யப்பட்டு, புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

குற்றச்சாட்டுகள் பதிவு செய்வதற்காக அவரை பிப்ரவரி 16-ல் ஆஜர்படுத்தும்படி உத்தரவிட்டிருந்த நிலையில், அமலாக்கத் துறை வழக்கில் இருந்து தன்னை விடுவிக்கக் கோரி செந்தில் பாலாஜி தரப்பில் அமர்வு நீதிமன்றத்தில் புதிய மனு தாக்கல் செய்யப்பட்டது. இதனால் குற்றச்சாட்டு பதிவு செய்யும் நடைமுறை மேற்கொள்ளப்படாமல் தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

செந்தில்பாலாஜி மனுவில், தனக்கு எதிரான குற்றச்சாட்டுக்களுக்கு முகாந்திரமில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், விடுவிக்க கோரிய மனு மீது உத்தரவு பிறப்பிக்கப்படும் வரை குற்றச்சாட்டுகள் பதிவை தள்ளிவைக்கவும் கோரப்பட்டுள்ளது.

இந்த மனு சென்னை மாவட்ட மூன்றாவது கூடுதல் அமர்வு நீதிமன்ற நீதிபதி டி.வி. ஆனந்த் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது மனு குறித்து அமலாக்கத் துறை பதிலளிக்க உத்தரவிட்ட நீதிபதி விசாரணையை மார்ச் நான்காம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

# அரியலூரிருந்து திருச்சிக்கு இடைநில்லா பேருந்துகள் இயக்க வேண்டும் என மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை மனு



அரியலூர்,பிப்.21-

அரியலூரில் இருந்து திருச்சிக்கு இடைநில்லா பேருந்துகள் இயக்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர் ஜா.ஆனிமேரி ஸ்வர்ணாவிடம் கோரிக்க மனு கொடுக்கப்பட்டுள்ளது.

இது பற்றி அரியலூரை சேர்ந்த சமூக ஆர்வலர் வழக்கறிஞர் சுகுமார் கொடுத்த கோரிக்கை மனுவில் கூறியுள்ளதாவது:

அரியலூர் மற்றும் சுற்றுப்பகுதியில் உள்ள மாணவ, மாணவிகள், வேலைக்குச் செல்லும் பணியாளர்கள், விவசாயிகள் வணிகர்கள் மற்றும் பொதுமக்கள் என இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டோர் திருச்சிக்கு பயணிக்கின்றனர். அரியலூரில் இருந்து திருச்சிக்கு செல்லவதென்றால் குறைந்தது இரண்டு மணி நேரத்துக்கு மேல் பயணிக்க வேண்டி உள்ளது, இதனால் கால விரையம் ஏற்படுகிறது.

திருச்சி – சிதம்பரம் சாலை நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி மக்கள் பயன்பாட்டில் உள்ளது, எனவே பொதுமக்கள் விரைந்து திருச்சிக்கு செல்ல அரியலூரில் இருந்து திருச்சிக்கு இடையில்லா பேருந்து சேவையை தொடங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பொதுமக்களின் நலனை கருதி 5 இடைநில்லா பேருந்துகளை இயக்க உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன் இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஜெயங்கொண்டம் அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் கலையரங்கம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது



அரியலூர்,பிப்.21-

ஜெயங்கொண்டம் சோழன் சிட்டி லயன் சங்கத்தின் வெள்ளி விழா ஆண்டை முன்னிட்டு, ஜெயங்கொண்டம் அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளி வளாகத்தில், ரூபாய் 8 லட்சம் செலவில் கலையரங்கம் கட்ட, அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

இந்நிகழ்வில் லயன்ஸ் சங்கத்தின் சாசனத்தலைவர், லயன் டாக்டர் ஆர்.கருப்பையா, மாவட்ட ஒருங்கிணைப்பாளர் லயன் கே.இராஜன், மாவட்டத்தலைவர்கள் லயன் ரமேஷ்குமார், லயன் எம்.சதாசிவம், லயன் முத்துக்குமரன், லயன் சி.பி. ராஜா, வட்டாரத்தலைவர் லயன் சக்தி ரவிச்சந்திரன், மண்டல ஒருங்கிணைப்பாளர் லயன் ஐய்யப்பன் ஆசிரியர், லயன் சுந்தரேசன், லயன் சரவணன், மற்றும் தலைமை ஆசிரியர் தவிக்குமார் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

இதற்கான ஏற்பாடுகளை சங்க நிர்வாகிகள் ராஜேஷ் குமார், அஸ்வந்த் ராஜா, கார்த்திக் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

# தமிழக வேளாண் பட்ஜெட்டை "திறமையாக கையாண்டிருக்கிறார்கள்"

## செல்வப்பெருந்தகை கருத்து



*சென்னை : பிப். 21-*

*"மத்திய அரசு புறக்கணித்தாலும், நிதி நிலைமை மிகமோசமாக இருந்த போதிலும் திறமையாக கையாண்டு இந்த நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்திருக்கிறார்கள். இது வரவேற்கத்தக்கது. மீண்டும் விவசாயிகளின் கோரிக்கையை காங்கிரஸ் வலியுறுத்தும்" என தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.*

*தமிழக அரசின் 2024-25 நிதியாண்டுக்கான வேளாண் பட்ஜெட்டை சட்டப்பேரவையில் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேற்று காலை 10 மணியளவில் தாக்கல் செய்தார். இந்நிலையில், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை இது குறித்து செய்தியாளர்களிடத்தில் பேசும்போது, "மத்திய அரசு புறக்கணித்தாலும், நிதி நிலைமை மிக மோசமாக இருந்த போதிலும், திறமையாகக் கையாண்டு இந்த நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்திருக்கிறார்கள். இது வரவேற்கத்தக்கது.*

*மீண்டும் விவசாயிகளின் கோரிக்கையை காங்கிரஸ் வலியுறுத்தும். தேர்தலுக்குப் பிறகு முழுமையான பட்ஜெட்டின் மீது விவாதம் நடைபெறும். இந்த விவாதத்தின் போது காங்கிரஸ் உட்பட அனைத்து கட்சிகளும் கோரிக்கை வைக்க இருக்கிறோம். அந்தக் கோரிக்கையின் அடிப்படையில், பதில் உரையில் வேளாண்மை துறை அமைச்சர், இவை அனைத்தையும் நிறைவேற்றித் தருவதாக கூறியிருக்கிறார்.*

*மத்திய அரசை கண்டித்து இந்தியா முழுவதும் வேளாண் குடிமக்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். எதற்காக போராடிக் கொண்டிருக்கிறார்கள்? ஏன் போராடிக் கொண்டிருக்கிறார்கள்?. மோடி அரசு ஆட்சிக்கு வந்ததிலிருந்தே வேளாண் குடிமக்களை வஞ்சிக்கிறது. மூன்று புதிய வேளாண் சட்டத்தை கொண்டு வந்து, விவாதம் நடத்தாமல் எதிர்க்கட்சிகளைக் கூட கேட்காமல் இரவோடு இரவாக நிறைவேற்றினார்கள்.*

*விவசாயிகள் டெல்லியை முற்றுகையிட்டு, ஒரு வருடம் போராடினார்க. சுதந்திரப் போராட்டத்தில் எப்படி உயிர்களை பலி கொடுத்தார்களோ, அப்படி இந்த போராட்டத்திலும் பலி கொடுத்தார்கள். ஆனால் மோடி அரசு இதற்கு செவிசாய்க்கவில்லை. அமைச்சரின் மகனே காரையேற்றி கொலை செய்யும் அளவுக்கு சம்பவங்கள் நடந்திருக்கின்றன. ஆனால் சேதாரம் விவசாயிகளுக்கு தான். மத்திய அரசு மாநில அரசுகளை வஞ்சிக்கிறது. மத்திய அரசு விவசாயிகளை பாதுகாக்க வேண்டும் என்றால் தாராளமாக நிதி வழங்க வேண்டும்" என்றார்.*

# உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடும்படி திமுக நெருக்கடி எதுவும் கொடுக்கவில்லை : திருமாவளவன் விளக்கம்



சென்னை : பிப். 21-

நாடாளுமன்ற தேர்தலில் 5 மாநிலங்களில் விடுதலை சிறுத்தைகள் கட்சி போட்டியிடும் என அக்கட்சியின் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற தேர்தலில் பானை சின்னம் கோரி இந்திய தேர்தல் ஆணையத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் மனு அளித்தார். பின்னர் செய்தியாளர்களை சந்தித்து பேசிய அவர்; நாடாளுமன்றத் தேர்தலில் பானை சின்னம் ஒதுக்க கோரி தலைமை தேர்தல் ஆணையத்தில் மனு அளித்துள்ளோம். கடந்த சட்டமன்ற தேர்தல், உள்ளாட்சித் தேர்தலில் பானை சின்னத்தில் போட்டியிட்டதால் அதனை வழங்க கோரினோம்.

நாடாளுமன்ற தேர்தலில் 5 மாநிலங்களில் விடுதலை சிறுத்தைகள் கட்சி போட்டியிடும். தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரா, தெலுங்கானாவில் விடுதலை சிறுத்தைகள் கட்சி போட்டியிட உள்ளது. தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகளில் ஆளுங்கட்சியினரின் தலையீடுகள் இருப்பதுபோல் தெரிகிறது. உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடும்படி திமுக நெருக்கடி எதுவும் கொடுக்கவில்லை. நாடாளுமன்ற தேர்தலில் பொது தொகுதி ஒன்றை ஒதுக்கும்படி திமுக-விடம் கேட்டுள்ளோம் என்று கூறினார்.

15வது ஊதிய குழு உட்பட 6 அம்ச கோரிக்கை தொடர்பாக

# போக்குவரத்து தொழிற்சங்கங்கள் இன்று பேச்சுவார்த்தைக்கு அழைப்பு



சென்னை : பிப். 21-

15வது ஊதிய குழு உட்பட 6 அம்ச கோரிக்கை தொடர்பாக போக்குவரத்து தொழிற்சங்கங்கள் இன்று பேச்சுவார்த்தைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

போக்குவரத்து தொழிலாளர்களுக்கான 15வது ஊழியர் குழுவை அமைக்க வேண்டும். நிலுவையில் இருக்க கூடிய ஓய்வு பெற்றவர்களுக்கான 96 மாத ஓய்வூதிய பலன்களை வழங்க வேண்டும், அகவிலைப்படியை வழங்கவேண்டும். காலிப்பணியிடங்களை நிரப்ப வேண்டும் உள்ளிட்ட 6 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி போக்குவரத்து தொழிற்சங்கத்தினர் கடந்த ஜனவரி மாதம் வெளி நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொடர்ச்சியாக தொழிலாளர் நலத்துறை, போக்குவரத்து தொழிற்சங்கங்கள் மற்றும் போக்குவரத்து துறை உடனான முத்தரப்பு பேச்சுவார்த்தை நடைபெற்றுவருகிறது. குறிப்பாக பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி போக்குவரத்து தொழிற்சங்கத்தினர் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த நிலையில் முத்தரப்பு பேச்சுவார்த்தை தொடர்ந்து 4 கட்டங்களாக நடைபெற்றிருந்தது. 4 கட்டங்களாக நடைபெற்ற பேச்சுவார்த்தையிலும் உடன்பாடு எட்டப்படாத நிலையே தொடர்ந்து வந்தது.

இந்த நிலையில் பிரதான கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என தொழிற்சங்கத்தினர் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர். அந்த வகையில் 15வது ஊதிய குழு அமைப்பது உட்பட பல்வேறு நடவடிக்கைகளில் தமிழக போக்குவரத்துத்துறை ஈடுபட்டு வரக்கூடிய நிலையில் மற்ற கோரிக்கைகளை நிறைவேற்றுவது தொடர்பாக இன்றைய தினம் போக்குவரத்து தொழிலாளர்கள் பேச்சுவார்த்தைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

தொழிலாளர் நலத்துறையின் சார்பில் மேற்கொள்ளப்படக்கூடிய இந்த முத்தரப்பு பேச்சுவார்த்தைக்கு மதியம் 3 மணி அளவில் தொழிற்சங்க பிரதிநிதிகள் கலந்து கொள்ளுமாறு முறைப்படி அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்த பேச்சுவார்த்தையின் போது மீதம் இருக்கக்கூடிய கோரிக்கைகளை நிறைவேற்றுவது தொடர்பாக வலியுறுத்தப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இன்று மதியம் 3 மணி அளவில் தேனாம்பேட்டை டி.எம்.எஸ் வளாகத்தில் இருக்கக்கூடிய தொழிலாளர்கள் நல அலுவலகத்தில் தொழிலாளர்கள் நலத்துறை இணை ஆணையர் தலைமையில் பேச்சுவார்த்தை நடைபெற உள்ளது.

# எதிர்க்கட்சி துணைத் தலைவராக ஆர்.பி.உதயகுமாரை அங்கிகரிக்க கோரிய வழக்கு வாபஸ்



சென்னை : பிப். 21-

எதிர்க்கட்சி துணைத் தலைவராக ஆர்.பி.உதயகுமாரை அங்கீகரிக்க சட்டப்பேரவைத் தலைவருக்கு உத்தரவிடக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கை எதிர்க்கட்சித் தலைவரான எடப்பாடி பழனிசாமி வாபஸ் பெற்றுள்ளார்.

சென்னை உயர் நீதிமன்றத்தில், அதிமுக பொதுச் செயலாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி தாக்கல் செய்துள்ள மனுவில், "கடந்த 2021-ம் ஆண்டு நடந்த தமிழக சட்டமன்றத் தேர்தலில் 66 அதிமுக எம்எல்ஏக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சட்டமன்றத்தில் இரண்டாவது பெரிய கட்சியாக அதிமுக உள்ளது. 2021-ம் ஆண்டு மே மாதம் நடந்த அதிமுக எம்எல்ஏக்கள் கூட்டத்தில், எதிர்க்கட்சி தலைவராக நானும், துணைத் தலைவராக ஓ.பன்னீர்செல்வமும் தேர்ந்தெடுக்கபட்டோம்.

முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி எதிர்க்கட்சி கொறடாவாகவும், எஸ்.ரவி துணை கொறடாவாகவும் தேர்ந்தெடுக்கபட்டனர். சட்டமன்ற கட்சியின் செயலாளராக அன்பழகன் மற்றும் துணை செயலாளராக மனோஜ் பாண்டியனும் தேர்ந்தெடுக்கபட்டனர்.

2022-ம் ஆண்டு ஜூலை 11-ம் தேதி நடைபெற்ற அதிமுக பொதுக்குழுக் கூட்டத்தில் சிறப்பு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஓ.பன்னீர்செல்வம், மனோஜ் பாண்டியன், வைத்திலிங்கம் ஆகியோர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டனர். இதைத் தொடர்ந்து, 2022-ம் ஆண்டு, ஜூலை 17-ல் கட்சியின் எதிர்க்கட்சி துணை தலைவராக ஆர்.பி.உதயகுமார், துணைச் செயலாளராக அக்ரி கிருஷ்ண்மூர்த்தியை நியமித்து சபாநாயருக்கு கடிதம் அனுப்பி வைத்தோம். 5 முறை நினைவூட்டல் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால், அந்த கோரிக்கையின் மீது சபாநாயகர் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இருக்கையை மாற்றியமைக்க சபாநாயகரிடம் முறையிட்டோம். அது தொடர்பாகவும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதிமுகவில் இருந்து நீக்கப்பட்டவர்கள் தொடர்ந்து அதிமுக உறுப்பினர்களுடன் அமர்ந்து இருப்பதால், விவாதங்களின் போது அதிமுகவினரால் திறமையாக செயல்பட முடியவில்லை. எனவே, கட்சியில் இருந்து சட்டமன்ற பதவிகளுக்கு புதிதாக தேர்ந்தெடுக்கபட்டவர்களை அங்கீகரிக்க, சபாநாயகர் மற்றும் சட்டமன்ற செயலாளருக்கு உத்தரவிட வேண்டும். அதேபோல், எதிர்க்கட்சி துணைத் தலைவர் இருக்கையை மாற்றியமைக்க சபாநாயகருக்கு உத்தரவிட வேண்டும்" என மனுவில் கோரியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி அனிதா சுமந்த் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது எதிர்க்கட்சி துணை தலைவர் இருக்கை ஆர்.பி.உதயகுமாருக்கு கடந்த பிப்ரவரி 14-ம் தேதி ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே, மனுவை திரும்பெற அனுமதிக்க வேண்டும் என எடப்பாடி பழனிசாமி தரப்பில் கோரிக்கை வைக்கப்பட்டது. இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதி, மனுவை திரும்பெற அனுமதித்து வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

தாராட்சி கிராம சபை கூட்டத்தில் காவல்துறை மூலம்

# இளைஞர்களை அப்புறப்படுத்திய வட்டார வளர்ச்சி அலுவலரை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது




ஊத்துக்கோட்டை, பிப்21-
திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம்,தாராட்சி ஊராட்சி மன்றத் தலைவராக பதவி வகித்து வருபவர் சிவகாமி செஞ்சுவேல் ஆவார். இந்நிலையில்,கடந்த ஜனவரி மாதம் 26-ம் தேதி இந்த ஊராட்சியில் கிராம சபை கூட்டம் நடைபெற்றது.

இதில்,மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பாலாஜி கிராமசபை கூட்டத்தின் பார்வையாளராக கலந்து கொண்டார். இக்கூட்டத்தின்போது சில இளைஞர்கள் கேள்வி கேட்டனர்.

மேலும், கூட்டம் ஆரம்பித்த உடனேயே அங்கிருந்தவர்களிடம் கையொப்பம் பெற்றுக்களாம். மேலும், கேள்வி கேட்ட இளைஞர்களை ஊராட்சி மன்றத் தலைவரின் கணவர் அநாகரிகமான வார்த்தைகளால் பேசினாராம். மேலும், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் காவல்துறையினர் மூலம் அந்த இளைஞர்களை கிராம சபை கூட்டத்தில் இருந்து அப்புறப்படுத்தினாராம். இந்நிலையில்,மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மீது நடவடிக்கை எடுக்க கோரியும்,இந்த ஊராட்சியில் உடனடியாக சிறப்பு கிராம சபை கூட்டத்தை நடத்த கோரியும் தாராட்சி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் பல்வேறு கட்ட தொடர் போராட்டங்களை செய்து வந்தனர்.

இந்நிலையில், நேற்று பெரியபாளையத்தில் உள்ள எல்லாபுரம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தை முற்றுகையிட்டு கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தாராட்சி கிளை செயலாளர் திருப்பதி தலைமை தாங்கினார். மாவட்ட செயற்குழு உறுப்பினர் பன்னீர்செல்வம், வட்டச் செயலாளர் கண்ணன், ஒன்றிய கவுன்சிலர் ரவி, மாவட்ட குழு உறுப்பினர்கள் கங்காதரன்,கன்னியப்பன், பத்மா, வட்ட குழு உறுப்பினர்கள் அருள்,வேலன் ஆகியோர் கலந்து கொண்டு கண்டன உரை ஆற்றினர். முடிவில்,கிளை செயலாளர் மஞ்சுளா வேலன் நன்றி கூறினார்.இதன் பின்னர், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் சார்பில் கோரிக்கை மனுவை வட்டார வளர்ச்சி அலுவலக மேலாளர் கார்த்திகேயனிடம் வழங்கினர்.

# காரைக்கால் மஸ்தான் சாகிப் தர்கா ஹந்திரி விழா கொடி ஏற்றத்துடன் தொடங்கியது




காரைக்கால்,பிப்21
காரைக்காலில் அமைந்துள்ள புகழ்பெற்ற மஸ்தான் சாஹிப் தர்காவில் ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் கந்தூரி விழா இந்த ஆண்டு நேற்று 20-ஆம் தேதி முதல் மார்ச்3-ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

நேற்று முதல் நாளான மஸ்தான் சாஹிப் தர்காவில் ஹந்திரி விழா தொடங்கியது, தர்கா நிர்வாகிகள் சிறப்பாக ஏற்பாடு செய்து இருந்தனர்.

கொடி ஏற்றும் நிகழ்ச்சிக்காக பல்வேறு ஜோடனையுடன் ரதங்கள்,கப்பல்,சாம்பிராணி ரதம்,பல்லாக்கு உட்பட ஏகப்பட்ட ரதங்கள் ஊர்வலமாக வந்தது.பின்னர் இரவு8மணிக்கு மேல் பாமரத்தில் கொடி ஏற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது.

பத்தாவது நாளில் சந்தன கூடு ஊர்வலம் நடைபெறும், அதேபோல மார்ச் 3 தேதி ஹந்திரி விழாவின் கடைசி நாளன்று கொடிஇறக்கும்நிகழ்வு நடைபெற்று ஹந்திரி விழா நிறைவு பெறும். நேற்று நடந்த நிகழ்வில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளை காரைக்கால் மாவட்ட முதுநிலை காவல் கண்காணிப்பாளர் திரு. மணிஷ் கண்காணிப்பாளர் (தெற்கு) சுப்பிரமணியன் மேலும் வட்டாட்சியர் செல்லமுத்து தீயணைப்புத் துறை நகராட்சி நிர்வாகம் சுகாதாரத்துறை உள்ளிட்ட துறை அதிகாரிகள் முக்கியபிரமுகர்கள்.பக்தர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

# சிறுவாபுரி பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் சுவாமி தரிசனம் செய்ய வந்த பெண் பக்தர் மயங்கி விழுந்ததால் பரபரப்பு




ஊத்துக்கோட்டை, பிப்21-
திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், சின்னம்பேடு என்று அழைக்கப்படும் சிறுவாபுரியில் பிரசித்தி பெற்ற பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் உள்ளது.இக்கோவிலை கடந்த 2022-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம்ரூ.1.25கோடி செலவில்புனரமைத்துமகா கும்பாபிஷேகம் செய்து வைத்தனர்.

இதன் பின்னர், இக்கோவிலுக்கு சுவாமி தரிசனம்செய்யபக்தர்களின் கூட்டம் நாளுக்கு,நாள் கட்டுக்கடங்காத வகையில் வந்த வண்ணம் உள்ளது. மேலும்,இக்கோவிலுக்கு தொடர்ந்து ஆறு வாரங்கள் செவ்வாய்க்கிழமைகளில் வந்து நெய்தீபம் ஏற்றி வழிபட்டால் வீடு, நிலம், வேலைவாய்ப்பு,திருமணம், பிள்ளைபேரு உள்ளிட்ட பக்தர்களின்வேண்டுதல்கள் நிறைவேறும் என்பது நம்பிக்கையாக உள்ளது. இதனால் இக்கோவிலுக்கு செவ்வாய்க்கிழமைகளில் கட்டுக்கடங்காத வகையில் பக்தர்களின் கூட்டம் வந்த வண்ணம் உள்ளது.

ஆனால்,இவ்வாறு வரும் பக்தர்கள் விரைவாக தரிசனம் செய்ய இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகளும்,காவல்துறை மற்றும் வருவாய் துறை அதிகாரிகள் உரிய ஏற்பாடுகள் செய்யவில்லை என பக்தர்களின் குற்றச்சாட்டாக உள்ளது. இந்நிலையில், நேற்று முருகனுக்குஉகந்ததினமான செவ்வாய்க்கிழமையாகும். எனவே, நேற்று விடியற்காலை மூலவருக்கு சிறப்பு பூஜைகள்,பல்வேறு வகையான திரவங்களால் சிறப்பு அபிஷேகம் உள்ளிட்டவைகளை செய்தனர்.இதன் பின்னர், வெள்ளிக் கவசம் அணிவிக்கப்பட்டு சிறப்பு அலங்காரம் செய்தனர். நேற்று விடியற்காலை முதலே இக்கோவிலில் பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து சுவாமி தரிசனம் செய்தனர். மேலும், கோவிலுக்கு செல்லும் வழியையும், தரிசனம் செய்துவிட்டு வெளியே வரும்வழியையும்ஒவ்வொரு வாரமும் மாற்றி,மாற்றி அமைப்பதால் பக்தர்கள், முதியவர்கள்,பெண்கள், குழந்தைகள்உள்ளிட்டோர் கோவிலுக்குள் செல்வதிலும், வெளியே வருவதிலும் மிகுந்த சிரமத்துக்கு உள்ளானார்கள். பக்தர்கள் நீண்ட வரிசையில் சுமார் 3 மணி நேரம் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர். அப்போது ரூ.100 கட்டண தரிசன வரிசையில் வந்த சென்னை பெண் பக்தர் ராஜம்மாள் (வயது62) என்பவர்மயங்கிவிழுந்தார். அருகில் இருந்தவர்கள் அவரை மீட்டு பெஞ்சில் படுக்க வைத்தனர்.

இப்பிரச்சினையால் பக்தர்கள் கூட்டத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.எனவே,வரும் காலங்களில் முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள், குழந்தைகள் உள்ளிட்டோர் சிரமமின்றி விரைவாக தரிசனம் செய்ய சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பக்தர்களும் சமூக ஆர்வலர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.கூட்டம் கட்டுக்கடங்காமல்வந்ததால் சிறுவாபுரி-புதுரோடு சாலையிலும்,சிறுவாபுரி-அகரம் சாலையிலும் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. மேலும், சாலையின் இருபுறமும் வியாபாரிகள் சாலையை ஆக்கிரமிப்பு செய்து கடைகள் வைத்துள்ளனர்.இதனால் மேலும்,போக்குவரத்து பாதிக்கப்பட்டது.இதனால் பெரியபாளையத்தில்இருந்து செங்குன்றம்செல்லும்தடம் எண்:547,கோயம்பேட்டில் இருந்துஆரணிக்குசெல்லும் தடம் எண்:114டி ஆகிய பேருந்துகளை ஓட்டுநர்கள் மிகுந்த சிரமத்துடன் இயக்கினர்.



உலக நுகர்வோர் உரிமைகள் தின விழாவை முன்னிட்டு மாவட்டஆட்சித்தலைவர் வே.இரா.சுப்புலெட்சுமி, வேலூர் நேதாஜி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பல்வேறு அரசு துறையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளை திறந்து வைத்து, பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் த. மாலதி, மாவட்ட வழங்கல் அலுவலர் சுமதி, ஆதிதிராவிட நலத்துறை அலுவலர் இராமசந்திரன், துணைப்பதிவாளர் (பொதுவிநியோக திட்டம்) சுவாதி உட்பட பலர் கலந்து கொண்டனர்.



சென்னை ஆவடி அரசு பள்ளி மாணவிகள் சட்டசபை நிகழ்வுகளை நேரில் காண நேற்று சென்னை தலைமை செயலகம் சட்டசபைக்கு வந்தனர். உடன் பள்ளி ஆசரியர்கள் உள்ளனர்



சென்னை எண்ணூர் தாழங்குப்பம் பகுதியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே குப்பன் தலைமையில் மீனவ மக்களுக்கு நலத்திட்ட உதவி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது, இதில் கலந்துகொண்ட அமைப்பு செயலாளர் ராயபுரம் மனோ, மீனவ மக்களுக்கு ஐந்து கிலோ அரிசி புடவை மாணவர்களுக்கு நோட்டு புத்தகம் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார், உடன் 7 வது வார்டு மாமன்ற உறுப்பினர் கார்த்திக் உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்



சென்னை திருவொற்றியூரில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 50 லட்சம் ரூபாய் செலவில் பூங்கா சீரமைக்கப்பட்டு நூலகம் திறக்கப்பட்டன.திருவொற்றியூர் விம்கோ நகர் சக்திபுரம் பகுதியில் ரூபாய் 50 லட்சம் செலவில் புதியதாக பூங்கா அமைப்பதற்கும் ஏற்கனவே அஜாக்ஸ் பேருந்து நிலையம் உள்ள மாநகராட்சி பூங்காவில் விளையாட்டு உபகரணங்கள் மற்றும் பூங்காவிற்கு வரும் மக்கள் பயன் பெறுவதற்காக. நூலகத்தை வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி மக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் மாநகராட்சி மண்டல குழு தலைவர் தனியரசு திமுக பகுதி செயலாளர் அருள்தாஸ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்



காரைக்கால் மாவட்டத்தில் தெற்கு தொகுதிக்கு உட்பட்ட ஞானப்பிரகாசம் வீதியில் எதிர்பாராத விதமாக இஸ்மாயில் நாச்சியாருக்கு சொந்தமான கூரை வீடு தீப்பற்றி எரிந்த நிலையில் சம்பவம் அறிந்து தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நாஜிம் சென்று பார்வையிட்டு முதலுதவி வழங்கிய நிலையில் சட்டமன்ற உறுப்பினர் வேண்டுகோளின் பேரில் வருவாய்த்துறை மூலம் , எரிந்த வீட்டின் உரிமையாளருக்கு 20 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை நேற்று வழங்கினார்கள். இந்நிகழ்வில் வருவாய் துறையைச் சேர்ந்த துணை வட்டாட்சியர் தீனதயாளன் வருவாய் அதிகாரி கமலஹாசன் மற்றும் கிராம நிர்வாக அதிகாரி செந்தாமரைக்கண்ணன் உள்ளிட்ட அதிகாரிகள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் ஒன்றியத்திற்குட்பட்ட மேலையூர் ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் ரூ.9 லட்சத்து 16 ஆயிரம் மதிப்பீட்டில் கீழக்கண்ணி வாய்க்கால் தூர்வாரும் பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின்போது செம்பனார்கோயில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மீனா, மஞ்சுளா உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

# நான்கு மாதங்களாக சாலை சீரமைக்காததால் கம்யூனிஸ்ட் கட்சி கவுன்சிலர் சாலை மறியல்



சென்னை, பிப். 21
சென்னை திருவெற்றியூர் ராமநாதபுரம் பகுதியில் கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பு சாலை போடுவதற்காக சாலைகளை தோண்டி மில்லிங் செய்துள்ளனர் இதனால் பொதுமக்கள் மிகவும் சிரமத்துக்கு ஆளாகினர் சாலைகள் மேடும் பள்ளமாக மாறியிருப்பதால் பொதுமக்கள் நடக்கக்கூட முடியாமல் வாகன ஓட்டிகளும் கீழே விழுந்து தினசரி விபத்துக்கள் ஏற்பட்டு வருகிறது.

இதனை அடுத்து மாநகராட்சி நான்காவது வார்டு மாமன்ற உறுப்பினர் கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த ஜெயராமன் அப்பகுதி மக்களுடன் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டார் உடனடியாக தகவல் இருந்து வந்த சாலை செப்பனிடும்காண்ட்ராக்டர் உடனடியாக சாலைகளை செப்பனிட்டு தருவதாக உறுதியளித்தார். சாலைகள் போடுவதற்கான பணிகளுக்காக சாலைகளை தூய்மைப்படுத்தும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டனர். இதனை அடுத்து கம்யூனிஸ்ட் கவுன்சிலர் போராட்டத்தை கைவிட்டார்.

# சங்கரன்பந்தல் கூலி தொழிலாளியின் மகன் 36 வயதில் நீதிபதி



மயிலாடுதுறை, பிப். 21-
மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுக்கா செம்பனார்கோவில் ஒன்றியம் சங்கரன்பந்தல் அருகே முனிவளங்குடி பிள்ளையார் தோப்புத் தெருவை சேர்ந்தவர் கூலி தொழிலாளி சுப்பிரமணியன் அவர் மனைவி அஞ்சம்மாள் இருவரும் கூலி வேலை செய்து வந்தனர் இவர்களது மகன் பாலதண்டாயுதம் தங்களது ஏழ்மை நிலையை உணர்ந்து பாலதண்டாயுதம் சிறு வயது முதலே கூலி வேலைக்கு சென்று தனது பள்ளி படிப்பை சங்கரன்பந்தல் அரசு மேல்நிலைப் பள்ளியில் பன்னிரண்டாம் வகுப்பு வரை படித்து முடித்தார்.

மேலும், ஏழ்மை நிலை காரணமாக படிக்க வசதியின்றி ஏழு ஆண்டுகள் படிக்க முடியாமல் தனது சகோதரர் தண்டபாணி கொத்தனார் பணி செய்து வருகிறார் அவருடன் பல்வேறு கூலி வேலைகளுக்கு சென்று உள்ளார் இருப்பினும் தான் வழக்கறிஞராக வேண்டும் என விடா முயற்சியில் மயிலாடுதுறை நீதிமன்றத்தில் வழக்கறிஞர் எழுத்தராக சில ஆண்டுகள்பணியாற்றியுள்ளார் பின்னர் பூம்புகார் அரசு கலைக் கல்லூரியில் பிஎஸ்சி தாவரவியல் இளங்கலை படிப்பை முடித்து பின்னர் திருச்சி அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் அரசு சட்ட கல்லூரியில் மூன்று ஆண்டுகள் சட்டப் படிப்பு முடித்து வழக்கறிஞராக பதிவு செய்து மயிலாடுதுறை மற்றும் செம்பனார்கோவிலில் நீதிமன்றத்தில் வழக்கறிஞராக பணியாற்றினார்.

இந்நிலையில் பெற்றோர் இறந்துவிடதனக்குதிருமணமாகி தனது ஊரிலேயே வசித்து வந்தவர் வழக்கறிஞராக இருக்கும் பொழுது தான் நீதிபதியாக வேண்டும் என்ற எண்ணத்தில் கடும் போராட்டத்திற்கு பிறகு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தில் தேர்வு எழுதிதேர்ச்சிபெற்று நேர்முகத் தேர்விலும்தேர்ச்சிபெற்றுதனது 36 ஆவது வயதில் தற்பொழுது உரிமையியல் நீதிபதியாக தேர்வு பெற்றுள்ளார்.

மேலும் 2015 க்கு பிறகு மயிலாடுதுறை மாவட்டத்தில் முதல் முறையாக நீதிபதியாக இளைஞர் தேர்வாகியுள்ளார் இந்நிலையில் நீதிபதியாக தேர்வாகியுள்ள பாலதண்டாயுதத்திற்கு மயிலாடுதுறை வழக்கறிஞர் அலுவலகத்தில் மாலை அணிவித்து கேக் வெட்டி உற்சாகமாககொண்டாடியுள்ளனர். தனது குடும்பத்தினரும் வீட்டில் கேக் வெட்டி உற்சாக கொண்டாட்டத்திலும் ஈடுபட்டுள்ளனர்.

ஏழ்மை நிலையிலும் விடா முயற்சியிலும் நீதிபதியாக தேர்வு பெற்றுள்ள பாலதண்டாயுதத்திற்கு வீடு தேடி சென்று பலர் சால்வை அணிவித்துவாழ்த்துதெரிவித்து வருகின்றனர். இந்நிலையில் நீதிபதியாக தேர்வாகியுள்ள பாலதண்டாயுதம் தன்னுடைய ஏழ்மை நிலையில் தன்னுடன் இருந்த தனது பெற்றோர் தற்பொழுது தான் நீதிபதியாக தேர்வாகியுள்ள நிலையில் அதனை காண தன்னுடன் இல்லையே என ஆனந்த கண்ணீருடன் பேட்டி அளித்தார் எவரும் தன்னம்பிக்கை விடாமுயற்சியுடன் இருந்தால் சாதிக்கலாம் எனவும் தெரிவித்தார்.




புதுவை அரசு காரைக்கால் மாவட்டத்தில் புதுவை அரசு தேர்தல் துறையின் ஆலோசனையின் பேரில் காரைக்கால் மாவட்ட தேர்தல் துறையின் சார்பாக மாவட்ட தேர்தல் அதிகாரி து .மணிகண்டன் அறிவுறுத்தலின் பேரிலும் நேற்று முதல் தேர்தல் விழிப்புணர்வு வாகனம் வரும் 29-ஆம் தேதி வரை காரைக்காலின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று பொது மக்களுக்கும் மற்றும் பள்ளி கல்லூரி மாணவ மாணவிகளுக்கும் தேர்தலில் வாக்களிப்பதன் அவசியம் குறித்தும் மேலும் நேர்மையாக வாக்களிப்பது குறித்தும் பல்வேறு விளக்கங்களையும் சந்தேகங்களையும் பொதுமக்களுக்கும் மாணவ மாணவிகளுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தி வரும் நிகழ்வின் தொடர் நிகழ்வாக இரண்டாம் நாளான நேற்று தருமபுரி உள்ளிட்ட பகுதிகளில் பல்வேறு அரசு மற்றும் தனியார் பள்ளிகளுக்கு சென்று பள்ளி மாணவ மாணவிகளிடம் வாக்களிப்பதின் அவசியம் குறித்தும் எப்படி வாக்களிக்க வேண்டும் என்பது குறித்தும் செய்முறை விளக்கம் செய்து காண்பித்தார்கள். இதன் ஒரு பகுதியாக நேற்று காரைக்காலில் அமைந்துள்ள அரசு செவிலியர் பயிற்சி கல்லூரியில் மாணவிகளிடம் வாக்களிப்பது குறித்தும் மேலும் இளம் வாக்காளர்கள் எப்படி வாக்களிக்க வேண்டும் என்பது குறித்தும் விளக்கி கூறினார். இந்நிகழ்வில் ஸ்வீப் ஒருங்கிணைப்பாளர் தாமோதரன் மற்றும் அவர்கள் சார்ந்த குழுவினர் உடன் இருந்தார்கள்.

# புதுக்கோட்டை செந்தூரான் பாலிடெக்னிக் கல்லூரியில் மாபெரும் இரத்ததான முகாம்




புதுக்கோட்டை, பிப்.21-
புதுக்கோட்டையை அடுத்த லேனாவிலக்கில் அமைந்துள்ள செந்தூரான் பாலிடெக்னிக் கல்லூரியில் மாபெரும் இரத்ததான முகாம் நேற்று நடைபெற்றது. கல்லூரி முதல்வர் செல்வராஜ் தலைமை வகித்தார், கல்லூரி தலைவர் செல்வராஜ் மற்றும் நிர்வாக இயக்குநர் வயிரவன் மற்றும் செயலாளர் தியாகராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கல்லூரி முதன்மை செயல் அலுவலர் கார்த்திக் இரத்ததானத்தை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பேசினார், மேலும் இரத்ததானம் வழங்க உள்ள மாணவர்களுக்கு பாராட்டு தெரிவித்தார், இந்த இரத்ததான முகாமிற்கு சிறப்பு விருந்தினராக புதுக்கோட்டை சரவணன், விராச்சிலை கார்த்தி, நற்சாந்துப்பட்டி நாராயணன் மற்றும் முருகேசன் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர், இவர்கள் தம் உரையில் இரத்ததானம் பற்றிய விழிப்புணர்வு பற்றியும் அதனால் ஏற்படும் நன்மைகள் பற்றியும் இரத்த தானம் மட்டுமின்றி உடலுறுப்பு தானம் பற்றி தெளிவாக எடுத்துரைத்தனர் மேலும் நாம் கொடுக்கும் இரத்த தானமானது எவ்வாறு பல உயிர்களை காப்பாற்றுகிறது என்பதுபற்றியும் எடுத்துரைத்தனர்.

மேலும் எந்தெந்த இரத்த வகைகள் அரிய வகையான இரத்தம் என்பதனை மாணவர்களிடம் எடுத்துரைத்தனர், அதன் அடுத்த நிகழ்வாக கல்லூரி மாணவர்கள் ஆர்வத்துடன் தானத்தில் சிறந்த தானம் இரத்ததானம் என்பதற்கிணங்க தனது இரத்தத்தினை வழங்கினார்கள், நமது கல்லூரியை சேர்ந்த 60 மாணவர்கள் இரத்ததானம் வழங்கினார்கள், இரத்ததானம் செய்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

இதில் உபத்தலைவர் நடராஜன் தாளாளர் ராமையா முதன்மை செயல் இயக்குநர் பாண்டிகிருஷ்ணன் மனித வள இயக்குநர் மீனா வயிரவன் கல்லூரி நிர்வாகிகள், ஆசிரியர்கள் மாணவர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



நேற்று சட்டமன்றப் பேரவையில், தமிழ்நாடு அரசின் 2024-2025ஆம் ஆண்டிற்கான வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறைக்கான நிதிநிலை அறிக்கையை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தாக்கல் செய்தார். தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு, அமைச்சர் பெருமக்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.



தென்காசி மாவட்டத்தில் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தென்காசி தனித் தொகுதிக்கு திமுக சார்பில் போட்டியிடுவதற்காக தென்காசி வடக்கு மாவட்ட முன்னாள் திமுக செயலாளரும்,தலைமைசெயற்குழு உறுப்பினருமான மா.செல்லத்துரை சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று விருப்ப மனு பெற்றுக் கொண்டார்.

### இந்தியாவைக் கட்டியெழுப்புபவர்களுக்கு நீதி வழங்குவதன் மூலம்

# வலுவான மற்றும் வளமான இந்தியாவுக்கு காங்கிரஸ் அடித்தளமிடும் : ராகுல் காந்தி பதிவு

டெல்லி : பிப். 21-

இந்தியாவைக் கட்டியெழுப்பு பவர்களுக்கு நீதி வழங்குவதன் மூலம் வலுவான மற்றும் வளமான இந்தியாவுக்கு காங்கிரஸ் அடித்தளமிடும் என காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள அவர்; நரேந்திர மோடியின் இந்தியாவில் பிற்படுத்தப்பட்ட மக்கள், தலித்துகள், பழங்குடியினர் மற்றும் பொதுப்பிரிவு ஏழைகளுக்கு இடமில்லை. நாட்டின் பட்ஜெட்டில் ஒவ்வொரு ரூ.100க்கும், மூன்றில் இரண்டு பங்கு மக்களின் பங்கு வெறும் ரூ. 6 மட்டுமே. இந்த வகுப்பினருக்கு இழைக்கப்படும் கொடூரமான அநீதி, நாட்டை உள்ளிருந்து குழிபறிக்கிறது.

எனவே, நாட்டைப் பலப்படுத்தும் நோக்கில் காங்கிரஸ் இரண்டு புரட்சிகரமான நடவடிக்கைகளை எடுக்கப் போகிறது. முதல் படி சாதி வாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு, இது நாட்டின் எக்ஸ்ரே ஆகும். இரண்டாவது படி செல்வ வளங்களின் வரைபடமாகும், இது யாரிடம் என்ன, எவ்வளவு உள்ளது என்பதை அறிய உதவும். பின்தங்கிய மக்களில் மூன்றில் இரண்டு பங்கினரை நாட்டின் முன்னேற்றத்தில் பங்காளியாக்காமல் இந்தியாவின் வளர்ச்சி சாத்தியமற்றது. இந்தியாவைக் கட்டியெழுப்பு பவர்களுக்கு நீதி வழங்குவதன் மூலம் வலுவான மற்றும் வளமான இந்தியாவுக்கு காங்கிரஸ் அடித்தளமிடும் என்று குறிப்பிட்டுள்ளார்.

# எம்.ஆர். கல்வியியல் கல்லூரியில் பட்டமளிப்பு விழா



அரியலூர் : பிப். 21-

எம்.ஆர். கல்வியியல் கல்லூரியில் பட்டமளிப்பு விழா நடைபெற்றது.

அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் அடுத்துள்ள, தத்தனூர் மீனாட்சி இராமசாமி கல்வியியல் கல்லூரியில், 13, 14 மற்றும் 15வது பட்டமளிப்பு விழா, கல்லூரியின் கலையரங்கத்தில் நடைபெற்றது. கல்வி நிறுவனங்களின் தாளாளர் எம். ஆர். இரகுநாதன் தலைமை தாங்கினார். இயக்குனர்கள் முனைவர் இராஜமாணிக்கம் மற்றும் முனைவர் தியாகராஜன் கல்வியியல் கல்லூரியின் ஆலோசகர் வரதராஜன், முதல்வர்கள் முனைவர் சம்பத், மாலதி ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் எம்.ஆர். கல்வியியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் சம்பத் வரவேற்றார். ஆலோசகர் வரதராஜன் ஆண்டு அறிக்கை வாசித்தார்.

பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய தாளாளர் வருங்கால ஆசிரியர்கள் நற்பண்பு மிக்கவர்களாகவும், நல்லொழுக்கம் உள்ளவர்களாகவும், தனிமனித நடத்தையில் சிறந்து விளங்குபவராகவும் இருத்தல் வேண்டும். ஆசிரியர்கள் எந்நேரமும் சிந்தித்துக் கொண்டே இருக்க வேண்டும், ஒரு நோக்கத்தோடு, குறிக்கோளோடு பயணம் செய்ய வேண்டும். கல்வி தகுதியை உயர்த்திக் கொண்டே இருக்க வேண்டும். ஆசிரியர்கள் கடமையுணர்வோடு பணியாற்ற வேண்டும். எப்பொழுதும் படித்துக் கொண்டே இருக்க வேண்டும். மாணவர்களிடம் அன்பாக நடந்து கொள்ள வேண்டும். கடும் சொற்களைப் பேசுதல் கூடாது. எல்லா மாணவர்களையும் வேறுபாடு கருதாது பழக வேண்டும் என பல கருத்துகளை எடுத்துரைத்தார்.

இதனை அடுத்து பட்டமளிப்பு விழாவில் சிறப்பு அழைப்பாளராக திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக தொலைதூரக் கல்வி, கல்வியியல் துறை பேராசிரியர் முனைவர் எட்வர்டு வில்லியம் பெஞ்சமின் கலந்து கொண்டு, சுமார் 450-க்கும் மேற்பட்ட கல்வியியல் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு பட்டங்களை வழங்கி சிறப்புரையாற்றினார். விழாவிற்கு தேவையான ஏற்பாடுகளை துறை பேராசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவியர்களும் சிறப்பாக செய்திருந்தனர்.

### மதுரை உயர்நீதிமன்ற உத்தரவினால்

# பொன்னமராவதி ஜே.ஜே. நகர் மயான ஆக்கிரமிப்புகள் அகற்றம் – போலீசார் குவிப்பு






பொன்னமராவதி, பிப்.21-

புதுக்கோட்டை மாவட்டம் ஜே. ஜே. நகர் பொதுமக்கள் பல வருட கோரிக்கைகளின் ஒன்றான. இந்து, முஸ்லீம் கிறிஸ்து. ஆகியோர்களின் இறந்தவர்களை அடக்கம் செய்யும் மயானத்தின் ஒரு பகுதி பல வருடங்களாக ஆக்கிரமிப்பில் இருந்த நிலையில். தற்போது மதுரை உயர்நீதிமன்ற உத்தரவின் பெயரில் மயான பகுதியில் உள்ள ஆக்கிரமிப்புகளை ஜே.சி.பி இயந்திரங்கள் மூலம் பொன்னமராவதி தாசில்தார் சாந்தா மற்றும் பொன்னமராவதி காவல் ஆய்வாளர் பத்மா, தலைமையில் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர், மின்வாரிய பொறியாளர்கள், ஊராட்சி மன்றத் தலைவர் கீதா சோலையப்பன், துணைத் தலைவர் சாமிநாதன், கிராம நிர்வாக அலுவலர், கிராம நிர்வாக உதவியாளர்கள், வார்டு உறுப்பினர் குமரேசன் ஆகியோர் மற்றும் பொதுமக்கள் முன்னிலையில். மயான ஆக்கிரமிப்புகள் கட்டிடங்கள், முள்வேலிகள், கார் பழுது பார்க்கும் இடம், உள்ளிட்ட ஆக்கிரமிப்புகள் 50க்கும் மேற்பட்ட காவல்துறையினரை கொண்டு ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டது.

# வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி : ம.பி காங்கிரஸ் ஆலோசனைக் கூட்டத்தில் கமல்நாத் பங்கேற்பு



போபால் : பிப். 21,

பாஜகவில் இணையப் போவதாக வெளிவரும் வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக, போபாலில் நடந்த காங்கிரஸ் கட்சியின் ஆலோசனைக் கூட்டத்தில் காணொலி வாயிலாக கமல்நாத் கலந்துகொண்டார். மத்தியப் பிரதேசத்தில் நடக்க இருக்கிற இந்திய ஒற்றுமை நீதி யாத்திரை தொடர்பாக இந்தக் கூட்டம் நடந்தது. கமல்நாத்துடன் கட்சியின் மூத்த தலைவர்கள் கலந்து கொண்டனர்.

மத்தியப் பிரதேச மாநில முன்னாள் முதல்வர் கமல்நாத் காங்கிரஸில் இருந்து விலகி பாஜகவில் இணையப் போகிறார் என்ற ஊகங்கள் வேகமாக பரவி வருகின்றன. இந்த நிலையில் காங்கிரஸில் இருந்து விலகும் எண்ணம் அவருக்கு இல்லை என்று மத்தியப் பிரதேச காங்கிரஸ் கட்சியினர் விளக்கம் அளித்து வந்தனர். எனினும், மாநிலத்தில் உள்ள காங்கிரஸ் எம்எல்ஏகளின் மனநிலை குறித்து அறிய காங்கிரஸ் பொதுச் செயலாளர் பன்வர் ஜித்தேந்திர சிங் நேற்று காலை மத்தியப் பிரதேசம் சென்றார். அவர் கூறுகையில், : "கமல்நாத் பாஜகவில் இணைப் போகிறார் என்ற ஊகத்தில் உண்மை இல்லை. அவை அனைத்தும் பாஜக ஊடகங்களால் உருவாக்கப்பட்ட வதந்திகள்" என்று தெரிவித்தார்.

மத்தியப் பிரதேச மாநில காங்கிரஸ் தலைவர் ஜித்து பத்வாரி கூறுகையில், "ஊடகங்களை பாஜக தவறாக பயன்படுத்துகிறது. ஒருவரின் உறுதித் தன்மையை கேள்விக்கு உள்ளாக்குகிறது. நான் கமல்நாத்திடம் பேசினேன். தான் எங்கேயும் போகவில்லை என்றும், காங்கிரஸ் கட்சியில் தொடர்வதாகவும் அவர் கூறினார். ஊடகங்களில் வெளியாகும் செய்திகள் சதியின் ஒரு பகுதி என அவர் என்னிடம் தெரிவித்தார். காங்கிரஸ்காரனாகவே இருந்தேன்; காங்கிரஸ்காரனாகவே இருப்பேன் என அவர் என்னிடம் கூறினார்" என்று தெரிவித்திருந்தார்.

காங்கிரஸ் மூத்த தலைவர் திக்விஜய்சிங், "கமல்நாத் தனது அரசியல் பயணத்தை நேரு - காந்தி காலத்தில் காங்கிரஸ் கட்சியுடன் தொடக்கியவர். அப்படிப்பட்டவர் காங்கிரஸ் குடும்பத்தை விட்டு பிரிவார் என்பதை நினைத்து பார்க்க முடியாது. அவர் காங்கிரஸ் கட்சியில் வகிக்காத பதவிகளே இல்லை. நான் கமல்நாத்துடன் தொடர்ந்து பேசிக்கொண்டுதான் இருக்கிறேன். அவர் காங்கிரஸ் கட்சியின் தூண்" என்றார்.

இந்நிலையில்தான், வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக, மத்தியப் பிரதேசத்தில் நடக்க இருக்கிற இந்திய ஒற்றுமை நீதி யாத்திரை தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் கமல்நாத் காணொலி வாயிலாக கலந்துகொண்டார்.

இதனிடையே, சனிக்கிழமை டெல்லி சென்றிருந்த கமல்நாத் அங்கு செய்தியாளர்களைச் சந்தித்தபோது, "அப்படி ஏதாவது இருந்தால் நான் முதலில் உங்களுக்கு தெரிவிக்கிறேன்" என்று கூறியிருந்தார். மூத்த அரசியல்வாதியான கமல்நாத் காந்தி குடும்பத்தின் மூன்று தலைமுறை தலைவர்களுடன் பணியாற்றியுள்ளார். கடந்த 1979-ம் ஆண்டு அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி, கமல்நாத்தை தனது மூன்றாவது மகனாக வர்ணித்தார்.

மாநிலங்களவைப் பதவி வழங்கப்படவில்லை என்று கமல்நாத் அதிருப்தியில் உள்ளதாகவும், கடந்த ஆண்டு இறுதியில் நடந்த மத்தியப் பிரதேச சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி படுதோல்வி அடைந்ததால் அவர் மீது ராகுல் காந்தி அதிருப்தியில் இருப்பதாகவும் கூறப்படுகிறது. இந்தத் தோல்வியால் மாநில காங்கிரஸ் தலைவர் பதவியில் இருந்து அவர் மாற்றப்பட்டார். மத்தியப் பிரதேச மாநிலத்தில் உள்ள 230 தொகுதிகளில் 163 இடங்களில் வென்று பாஜக ஆட்சியைத் தக்கவைத்துக் கொண்டது. காங்கிரஸ் 66 இடங்களை மட்டுமே பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

# அரியலூர் மாவட்டத்தில் பெண் குழந்தைகள் பாதுகாப்பு பிரச்சார குழு மாவட்ட ஆட்சியர் ஆனி மேரி ஸ்வர்ணா தொடங்கி வைத்தார்



அரியலூர் : பிப். 21-

அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியத்தில் நேற்று பெண் குழந்தைகள் பாதுகாப்பு பிரச்சார குழு மாவட்ட ஆட்சியர் ஆனி மேரி ஸ்வர்ணாவால் தொடங்கி வைக்கப்பட்டது.

மாவட்ட சமூக நலத்துறை மூலம் இந்த நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. குழந்தைகள் பாதுகாப்பு விழிப்புணர்வு பஸ் நிலையம் அருகில் தொடங்கி வைக்கப்பட்டது.

விழிப்புணர்வு நிகழ்ச்சியில் குழந்தை திருமணத்தை தடுத்தல்,1098 குழந்தைகள் உதவி மைய செயல்பாடு, பெண் குழந்தை பாலியல் சீண்டல், போக்சோ பற்றிய விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்த பிரச்சாரக் குழு அரியலூர் மாவட்டம் வருகை தந்துள்ளதை தொடங்கி வைத்து அரியலூர் மாவட்ட ஆட்சியர் துண்டு பிரசுரங்களை பள்ளி மாணவ, மாணவியர்கள் மற்றும் பொது மக்களுக்கு வழங்கினார்கள்.

நிகழ்ச்சியில் ஆண்டிமடம் வட்டாட்சியர் இளவரசன், வட்டார வளர்ச்சி அலுவலர், ஒருங்கிணைந்த குழந்தைகள் ஊட்டச்சத்து மற்றும் வளர்ச்சி திட்ட அலுவலர், அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் தமிழ்முருகன், வட்டார கல்வி அலுவலர் சந்திரலேகா மற்றும் வட்டார வள மைய மேற்பார்வையாளர் அருமைராஜ், ஆசிரியர் பயிற்றுநர்கள் மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# அண்ணாமலை நிகழ்ச்சிக்காக நடைபாதை, கடைகளை மறைத்தபடி பிளக்ஸ் பேனர்

## வியாபாரிகள் பாதிப்பு



தாம்பரம் : பிப். 21-

பல்லாவரத்தில் அண்ணாமலை நிகழ்ச்சிக்காக நடைபாதை, கடைகளை மறைத்தபடி பிளக்ஸ் பேனர் வைக்கப்பட்டு இருந்ததால் வியாபாரிகள், பொதுமக்கள் பாதிக்கப்பட்டனர்.

பாஜக சார்பில் பல்லாவரம் பேருந்து நிலையம் அருகில் "என் மண் என் மக்கள்" என்ற யாத்திரை நிகழ்ச்சி நேற்று காலை நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் பங்கேற்க தமிழ்நாடு மாநில தலைவர் அண்ணாமலை காலை 10 மணிக்கு வருவார் என அறிவிக்கப்பட்டிருந்தது. இதற்காக பாஜக தொண்டர்கள் வெயிலில் நீண்ட நேரம் காத்திருந்தனர். ஆனால் 45 நிமிடம் தாமதமாக அண்ணாமலை நிகழ்ச்சி நடக்கும் இடத்துக்கு வந்தார். இதனால் கடுப்பான தொண்டர்கள் அதிருப்தியடைந்தனர்.

இதுபோல் அண்ணாமலை நிகழ்ச்சி நடைபெற்ற பகுதியில் சாலையின் இருபுறமும் உள்ள கடைகளை மறைத்தபடி பிளக்ஸ் பேனர்கள் வைக்கப்பட்டு இருந்தது. இதனால் வியாபாரிகள் வியாபாரம் செய்ய முடியாமல் பாதிப்புக்குள்ளாகினர். குரோம்பேட்டை பேருந்து நிலையம் முதல் பல்லாவரம் பகுதி வரை சாலையோரங்களில் பிளக்ஸ் பேனர்கள், பாஜ கொடி கம்பங்கள் அமைக்கப்பட்டிருந்ததால் நடைபாதையை பயன்படுத்த முடியாமல் பொதுமக்களும், வாகன ஓட்டிகளும் சிரமப்பட்டனர். நிகழ்ச்சி நடைபெற்ற இடத்தில் குறைந்த எண்ணிக்கையில் கட்சியினர் இருந்ததால் சிறிது நேரம் பேசிவிட்டு அண்ணாமலை காரில் புறப்பட்டு சென்றார்.

# தமிழ்நாடு அரசின் நான் முதல்வன் ஒலிம்பியாட் திட்டம் தொடக்கம்



சென்னை : பிப். 21,

தமிழ்நாடு அரசு கொண்டு வந்துள்ள நான் முதல்வன் திட்டத்தின் கீழ், 'நான் முதல்வன் ஒலிம்பியாட்' என்ற திட்டத்தை இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

மேலும், 18 லட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு முழுவதும் இந்த திட்டம் விரிவாக்கம் செய்யப்படும் என்று பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில்மகேஷ் பொய்யாமொழி தெரிவித்தார். இது குறித்து அமைச்சர் அன்பில்மகேஷ் பொய்யாமொழி கூறியதாவது:

அரசுப் பள்ளிகளில் 6ம் வகுப்பு முதல் 9ம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு அவர்களின் திறனை பரிசோதிக்கும் வகையில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் சார்பில் பள்ளி மாணவர்களுக்கான நான் முதல்வன் ஒலிம்பியாட் திட்ட தொடக்க விழா சென்னை திருவல்லிக்கேணி வெலிங்டன் சீமாட்டி பள்ளியில் நடந்தது. 6ம் வகுப்பு முதல் 9ம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களின் திறனை சோதிக்கும் வகையில் மொழித்திறன், கணிதத் திறன், சிந்திக்கும் ஆற்றல் உள்ளிட்டவற்றின் கீழ் கையடக்க கணினி வழியே 50 மதிப்பெண்களுக்கான தேர்வு நடத்தப்படுகிறது.

தேர்வில் மாணவர்கள் பெறுகின்ற மதிப்பெண்களின் அடிப்படையில் அவர்களின் திறனை அறிந்து அதில் மாணவர்களை மேம்படுத்துவதற்கான திறன் மேம்பாட்டு கழகம் சார்பில் இந்த ஒலிம்பியாட் திட்டம் பரிசோதனை முயற்சியாக திருவல்லிக்கேணி வெலிங்டன் சீமாட்டி பள்ளியில் நேற்று தொடங்கி வைக்கப்பட்டது. தமிழ்நாடு முழுவதும் 18 லட்சம் அரசுப் பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் இந்த திட்டத்தை விரிவாக்கம் செய்யவும் அரசு திட்டமிட்டுள்ளது.

# 7-வது தமிழ்நாடு மாநில அளவிலான நீச்சல் போட்டியில் ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக் பள்ளி மாணவர்கள் சாதனை



புதுக்கோட்டை, பிப்.21-

புதுக்கோட்டை திருக்கோகர்ணம் ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் 7-வது தமிழ்நாடு மாநில அளவிலான நீச்சல் போட்டியில் வெற்றி பெற்று சாதனை புரிந்துள்ளனர், கேரள ஸ்போர்ட்ஸ் பெர்சன் அசோசியேசன் (கெஸ்பா) மற்றும் டால்பின் ஸ்விம்மிங் அகாடெமி இணைந்து சென்னையில் மாநில அளவிலான நீச்சல் போட்டியை நடத்தியது.

இதில் வெங்கடேஸ்வரா மெட்ரிக், மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் எம். தனுஷ்கிருஷ்ணன் 100மீ பிரீஸ்டைல் பிரிவில் மூன்றாம் இடமும், 200மீ ஃப்ரீஸ்டைல் பிரிவில் மூன்றாம் இடம் மற்றும் 4 x50மீ மெட்லி ரிலே பிரிவில் முதல் இடம், 4 x50மீ ஃப்ரீஸ்டைல் ரிலே பிரிவில் மூன்றாம், இடம் பெற்றார்.

எம். நிஷாந்த் கிருஷ்ணன் 4 x50மீ மெட்லெட் ரிலே பிரிவில் முதல் இடம், மற்றும் 4 x50மீ மிக்ஸ்டு ரிலே பிரிவில் மூன்றாம் இடம், பெற்றுள்ளார் எம். சந்தோஷினி 4 x50மீ மிக்ஸ்டு ரிலே பிரிவில் முதல் இடம் மற்றும் 4 x50மீ ஃப்ரீஸ்டைல் ரிலே பிரிவில் மூன்றாம் .இடம் பெற்றுள்ளார். வி. தேவிகா 4 x50மீ மிக்ஸ்டு ரிலே பிரிவில் மூன்றாம் இடமும் பெற்றுள்ளார். தமிழ்நாடு மாநில அளவிலான நீச்சல் போட்டியில் வெற்றிபெற்று பள்ளிக்குப் பெருமை சேர்த்த மாணவர்களுக்கு பள்ளியின் முதல்வர் கவிஞர் தங்கம் மூர்த்தி பரிசுகள் வழங்கி பாராட்டினார், பள்ளியின் ஒருங்கிணைப்பாளர்கள் கௌரி, கோமதிபிள்ளை உள்ளிட்ட ஆசிரியர்கள் நீச்சல் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

# "விவசாயிகளுக்கு ஏமாற்றம் அளிக்கின்ற பட்ஜெட் இது" – இபிஎஸ்



சென்னை : பிப். 21-

"வேளாண் பட்ஜெட்டை பொறுத்தவரைக்கும் விவசாயிகளுக்கு பலனில்லை. திட்டம் எதுவும் இல்லை. வேளாண் கல்லூரி சார்ந்த அறிவிப்புகள் எதுவும் இல்லை. விவசாயிகளுக்கு ஏமாற்றம் அளிக்கின்ற பட்ஜெட் இது" என்று எதிர்க்கட்சித் தலைவரும், அதிமுக பொதுச்செயலாளருமான எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சட்டப்பேரவை வளாகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த அவர், "திமுகவின் தேர்தல் அறிக்கையில், திமுக ஆட்சிக்கு வந்தால் விவசாயிகளுக்கு ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூ.2500 வழங்கப்படும் என்று அறிவித்தார். இதுவரை வழங்கவில்லை. அதேபோல் கரும்பு விவசாயிகளுக்கு ஒரு மெட்ரிக் டன் கரும்புக்கு ஆதார விலையாக ரூ.4000 வழங்கப்படும் என்று அறிவித்தார். ஆனால் மத்திய அரசு நிர்ணயித்த விலையோடு சிறப்பு ஊக்கத் தொகையாக ரூ.215 வழங்கப்படும் என்று வேளாண் பட்ஜெட்டில் சொல்லப்பட்டுள்ளது. குறுவை சாகுபடியால் டெல்டா மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு ஏதும் அறிவிக்கப்படவில்லை. இது மிகவும் வேதனைக்குரியது.

டெல்டா மாவட்டத்தில் சம்பா பயிரிட்ட விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு நிவாரணம் வழங்கவேண்டும். தென்மாவட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விளைநிலங்களை சீர் செய்து கொடுக்க வேண்டும். இந்த வேளாண் பட்ஜெட் தாக்கல் செய்த வேளாண் அமைச்சரின் சொந்த தொகுதியில் இருக்கிற கூட்டுறவு சக்கரை ஆலையை முழுமையாக இயக்காத அரசுதான் திமுக அரசு.

இயற்கை விவசாயத்துக்கு இந்த வேளாண் பட்ஜெட்டில் எந்த அறிவிப்பும் இல்லை. நிதி ஒதுக்கீடும் இல்லை. எல்லோரும் இயற்கை விவசாயத்தை நாடிச் சென்றுகொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்த பட்ஜெட்டில் அதற்கு எதுவும் அறிவிக்கப்படவில்லை. தென்னை விவசாயிகளுக்கு எந்த அறிவிப்பும் இல்லை. தேர்தல் அறிக்கையில் தென்னை விவசாயிகளுக்கு திட்டங்கள் அறிவிக்கப்படும் என்று சொல்லப்பட்டது. நீரா போன்ற பதநீர் இறக்கப்படும் என்றார்கள். ஆனால் பட்ஜெட்டில் அதுதொடர்பாக எந்த அறிவிப்பும் இல்லை.

காவிரி குண்டாறு திட்டம் கிடப்பில் போடப்பட்டுள்ளது. அதற்கு நிதி ஒதுக்கீடு செய்யவில்லை. மேகேதாட்டு பற்றி பட்ஜெட்டில் எந்த தகவலும் இல்லை. நடந்தாய் வாழி காவிரி திட்டத்தை மத்திய அரசிடம் போராடி பெற்றோம். அதுதொடர்பான எந்த விதமான அறிவிப்பும் இல்லை. இதேபோல் கோதாவரி - காவிரி இணைப்பு திட்டத்துக்கு இந்த அரசு முயற்சி எடுக்கவில்லை. இந்த அரசு செயல்படாத அரசு என்பதற்கு இதுவே உதாரணம்.

சிறு, குறு விவசாயிகளுக்கு எந்த திட்டம் அறிவிக்கப்படவில்லை. கிராமப்புறங்களுக்கு முக்கியதத்துவம் அளிக்கப்படவில்லை. இந்த பட்ஜெட்டை பொறுத்தவரைக்கும் விவசாயிகளுக்கு பலனில்லை. திட்டம் எதுவும் இல்லை. வேளாண் கல்லூரி சார்ந்த அறிவிப்புகள் எதுவும் இல்லை. விவசாயிகளுக்கு ஏமாற்றம் அளிக்கின்ற பட்ஜெட் இது.

பிற மாநில ஒத்துழைப்பை இந்த அரசு நாட வேண்டும். அதிமுக ஆட்சி இருந்தபோது தெலங்கானா மற்றும் ஆந்திர முதல்வர்களைச் சந்தித்து நீரை பெற்றது. ஆனால் திமுக அரசு எந்த மாநில முதல்வர்களையும் சந்திக்கவில்லை." என்று எடப்பாடி பழனிசாமி விமர்சனம் செய்தார்.

வரலாறு உலகம்

# காசாவில் பலி எண்ணிக்கை 29 ஆயிரத்தை தாண்டியது

## உணவுக்கு காத்திருந்த மக்கள் மீது துப்பாக்கி சூடு



**காசா : பிப். 21,**

**இஸ்ரேல் - ஹமாஸ் அமைப்பினர் இடையேபோர் நான்கு மாதங்களாக நீடித்து கொண்டிருக்கிறது. ஹமாஸ் அமைப்பு நிர்வகித்து வரும் காசா முனை மீது இஸ்ரேல் ராணுவம் தீவிர தாக்குதல் நடத்தி வருகிறது. இதில் குழந்தைகள், பெண்கள் உள்பட அப்பாவி பொது மக்கள் உயிரிழந்தனர்.**

இஸ்ரேல் தாக்குதலில், காசாவில் பலியானவர்கள் எண்ணிக்கை 29 ஆயிரத்தை தாண்டியுள்ளது. போர் காரணமாக உணவு, தண்ணீர் மருந்து உள்ளிட்டவை கிடைக்காமல் காசா மக்கள் தவித்து வருகிறார்கள். ஐ.நா. வின் நிவாரண குழுக்கள் சார்பில் உணவுகள் வழங்கப்படுகின்றன. ஆனால் அது காசா மக்களுக்கு போதுமானதாக இல்லை. இந்த நிலையில் உணவுக்காக காத்திருந்த மக்கள் மீது இஸ்ரேல் ராணுவம் துப்பாக்கி சூடு நடத்தியதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.


வடக்கு காசாவில் உள்ள நிவாரண முகாம்களில் தங்கி உள்ள மக்கள் உணவை வாங்குவதற்காக வரிசையில் காத்து கொண்டிருந்தனர். அப்போது அவர்கள் மீது திடீரென்று துப்பாக்கி சூடு நடத்தப்பட்டது. இதனால் மக்கள் அலறியடித்தபடி ஓடினர். இந்த தாக்குதலில் ஒருவர் உயிரிழந்தார். சிறுவர்கள் உள்பட பலர் காயமடைந்தனர். இந்த நிலையில் காசாவில் ஊட்டச்சத்து குறைபாடு, நோய் ஆகியவற்றால் குழந்தைகள் உயிரிழக்கும் அபாயம் உள்ளது என ஐ.நா. எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக ஐ.நா. வின் குழந்தைகள் நிறுவனம் கூறும்போது, "ஊட்டச்சத்து நெருக்கடியின் விளிம்பில் காசா பகுதி உள்ளது. வடக்கு காசாவில் நிலைமை மோசமடைந்துள்ளது. வாரக்கணக்கில் அனைத்து மனிதாபிமான உதவிகளில் இருந்தும் துண்டிக்கப்பட்டுள்ளது. இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளில் 15 சதவீதம் பேர் கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளன. தெற்கு காசாவில் 2 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் 5 சதவீதம் பேர் ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர்" என்று தெரிவித்துள்ளது.

உலக சுகாதார அமைப்பின் சுகாதார அவசர நிலை திட்ட தலைவர் மைக் ரியான் கூறும்போது, "பசி மற்றும் நோய் ஒரு கொடிய கலவையாகும். பசியுள்ள, பலவீனமான மற்றும் ஆழ்ந்த அதிர்ச்சிக்குள்ளான குழந்தைகள் நோய்வாய் படுவதற்கான வாய்ப்புகள் அதிகம். இது ஆபத்தானது மற்றும் சோகமானது மற்றும் நம் கண்களுக்கு முன்பாக நடக்கிறது" என்றார்.

# நவால்னி மரணத்தில் தொடரும் மர்மம்

## உடலை வழங்க மறுக்கும் அரசு



**ரஷியா : பிப். 21,**

**இவ்வருடம் ரஷியாவில் அதிபர் பதவிக்கான தேர்தல் நடைபெறவுள்ளது.**

ரஷிய அரசியலில் தனக்கு போட்டியாளர்கள் உருவாகாமல் இருக்க பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தவர் அதிபர் விளாடிமிர் புதின். புதினை தீவிரமாக விமர்சித்து வந்தவர், அலெக்சி நவால்னி. ரஷிய அரசியலில் எதிர்கட்சி தலைவராகவும் நவால்னி திகழ்ந்தார்.

நவால்னி மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு 19 வருடங்களுக்கும் அதிகமான சிறை தண்டனை வழங்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இந்நிலையில், சில தினங்களுக்கு முன், நவால்னி, சிறைச்சாலையில் சந்தேகத்திற்கு இடமான முறையில் திடீரென உயிரிழந்தார்.

சிறை வளாகத்தில் நடை பயிற்சி மேற்கொண்டு வந்த போது அவர் திடீரென மயங்கி விழுந்ததாகவும், அவசர மருத்துவ உதவியாளர்கள் விரைந்து வந்து அவருக்கு தேவையான மருத்துவ சிகிச்சைகள் அளித்தும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்ததாக சிறை அதிகாரிகள் தெரிவித்தனர். ரஷிய அதிபர் புதினுக்கு ஒரு நல்ல மாற்றாக நவால்னியை கருதி வந்த அந்நாட்டு மக்களில் பலரும், உலகின் பல அரசியல் தலைவர்களும், நவால்னியின் திடீர் மரணத்தால் அதிர்ச்சியடைந்தனர்.

சம்பவம் நடந்து 4 நாட்களுக்கு மேலாகியும், அலெக்சி நவால்னியின் உடல் தற்போது வரை அவரது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்படவில்லை. ரசாயன பரிசோதனைக்காக நவால்னியின் உடல் பாதுகாக்கப்படுவதாகவும், 2 வாரங்களுக்கு பிறகுதான் உடலை வழங்க முடியும் என்றும் அவரது தாயாரிடம் ரஷிய அரசு தெரிவித்துள்ளது. நவால்னியின் உடல் எங்கு வைக்கப்பட்டுள்ளது என்பதையும் ரஷிய அரசு சொல்ல மறுத்து வருகிறது.

இது குறித்து நவால்னியின் மனைவி, யூலியா நவால்னயா, "எனது கணவரை ரஷிய அதிபர் புதின் கொன்று விட்டார். அலெக்சியின் உடலில் உள்ள "நோவிசாக்" எனும் நரம்பு மண்டலத்தை தாக்க கூடிய அபாயகரமான விஷத்தின் தடயம் அவரது உடலில் இருந்து முழுவதுமாக விலகும் வரை உடலை வெளியே வழங்காமல் இருக்க அரசு முயல்கிறது," என குற்றம் சாட்டினார்.

அலெக்சியின் மரண செய்தி வெளியானதும் அவரது உடலை பெற சிறைச்சாலைக்கு சென்ற அவரது தாயாரையும், வழக்கறிஞரையும், உடலை பார்க்க விடாமல் சிறை அதிகாரிகள் தடுத்து விட்டனர். அலெக்சி விட்டு சென்ற பணிகளை தொடர போவதாக அவரது மனைவி யூலியா நேற்று முன்தினம் திங்கள்கிழமை உறுதிபட தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# வடகொரிய அதிபருக்கு சொகுசு காரை பரிசளித்த அதிபர் புதின்



**சியோல் : பிப். 21,**

**வடகொரிய அதிபருக்கு ரஷிய அதிபர் புதின் சொகுசு காரை பரிசளித்துள்ளார்.**

ரஷியாவும், வடகொரியாவும் நட்பு நாடுகளாக திகழ்கின்றன. வடகொரிய அதிபர் கிம் ஜங் உன் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் ரஷியா சென்றார். இந்த பயணத்தின்போது அவர் ரஷிய அதிபர் புதினை சந்தித்தார். இந்த சந்திப்பில் ரஷிய அதிபர் புதின், தான் பயன்படுத்தும் ரஷிய தயாரிப்பு சொகுசு காரான அன்ரூஸ் செனட் காரை வடகொரிய அதிபருக்கு காட்டினார். அந்த காரில் வடகொரிய அதிபர் கிம், பின் இருக்கையில் இருந்து பயணம் செய்தார்.

இந்நிலையில், வடகொரிய அதிபருக்கு ரஷிய அதிபர் புதின், புதிய கார் ஒன்றை பரிசளித்துள்ளார். ரஷியாவில் தயாரிக்கப்பட்ட அந்த கார் வடகொரிய அதிபரின் தனிப்பட்ட பயன்பாட்டிற்காக பரிசளிக்கப்பட்டுள்ளது. பரிசளிக்கப்பட்ட கார் எந்த வகையானது? எவ்வாறு வடகொரியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது? என்ற விவரங்கள் இதுவரை வெளியாகவில்லை. அதேவேளை, கார் பரிசளித்த ரஷிய அதிபருக்கு வடகொரிய அதிபரின் தங்கை கிம் யொ ஜாங் நன்றி தெரிவித்தார்.

# லெபனானில் ஹிஜ்புல்லாவை குறி வைத்து வான்வழி தாக்குதல் நடத்திய இஸ்ரேல்



**பெய்ரூட் : பிப். 21,**

**லெபனான் நாட்டின் சிடான் நகருக்கு தெற்கே தொழிற்சாலைகள் மற்றும் ஆயுத கிடங்குகள் உள்ள பகுதியில் இஸ்ரேல் வான்வழி தாக்குதலை நடத்தியது.**

இஸ்ரேல் மீது கடந்த ஆண்டு அக்டோபர் 7-ந்தேதி ஹமாஸ் பயங்கரவாத அமைப்பு நடத்திய கொடூர தாக்குதலில், 1,200 இஸ்ரேல் மக்கள் உயிரிழந்தனர். 240 பேர் பணய கைதிகளாக பிடித்து செல்லப்பட்டனர். அவர்களின் பிடியில் உள்ள 134 பேரில் 31 பேர் உயிரிழந்து விட்டனர் என்று இஸ்ரேல் சமீபத்தில் அறிவித்தது.

இதற்கு இஸ்ரேலும் பதிலடி கொடுத்து வருகிறது. இந்நிலையில், லெபனான் நாட்டில் ஹிஜ்புல்லா பயங்கரவாத அமைப்பு செயல்பட்டு வருகிறது. அதனை வெளியேற்றும்படி இஸ்ரேல் வலியுறுத்தி வருகிறது. காசா போரில், ஹமாஸ் பயங்கரவாத அமைப்புக்கு ஆதரவாக இஸ்ரேல் மீது ஹிஜ்புல்லா அமைப்பு ராக்கெட் தாக்குதல்களை நடத்தியது. இதற்கு பதிலடியாக இஸ்ரேலும் தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால், 170-க்கும் மேற்பட்ட ஹிஜ்புல்லா போராளிகள் மற்றும் 30-க்கும் மேற்பட்ட பொதுமக்களும் கொல்லப்பட்டு உள்ளனர்.

இந்நிலையில், லெபனானின் தெற்கே எல்லை பகுதியில் ஹிஜ்புல்லா ஆயுத குழுவை நோக்கி இஸ்ரேல் ராணுவம் நேற்று முன்தினம் திங்கள்கிழமை வான்வழி தாக்குதலை நடத்தியது. லெபனான் நாட்டின் சிடான் நகருக்கு தெற்கே தொழிற்சாலைகள் மற்றும் ஆயுத கிடங்குகள் உள்ள பகுதியில் இஸ்ரேல் வான்வழி தாக்குதலை நடத்தியது. இதில் 14 பேர் காயமடைந்தனர். அவர்களில் பலர் சிரியா நாட்டை சேர்ந்த தொழிலாளர்கள் ஆவர்.

இதுபற்றி இஸ்ரேல் ராணுவத்தின் தலைமை செய்தி தொடர்பாளர் கூறும்போது, லெபனானின் பயங்கரவாத குழுவான ஹிஜ்புல்லா அமைப்பு நடத்திய ஆளில்லா விமான தாக்குதலுக்கு பதிலடியாக இந்த தாக்குதல் நடத்தப்பட்டது என கூறினார். இந்நிலையில், சிடான் என்ற துறைமுக நகரருகே ஆயுத கிடங்குகள் மீது இஸ்ரேல் ராணுவம் 2 வான்வழி தாக்குதல்களை நடத்தியது உறுதி செய்யப்பட்டு உள்ளது.

# நாடெங்கிலும் பள்ளிகளில் செல்போனுக்குத் தடை விழிப்புணர்வு வீடியோவுடன் பிரதமர் ரிஷி சுனக் அதிரடி



**இங்கிலாந்து : பிப். 21,**

**இங்கிலாந்தில் பள்ளிகள் அனைத்திலும் செல்போன்களுக்கு தடை விதித்து பிரதமர் ரிஷி சுனக் உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்ட விழிப்புணர்வு வீடியோ வைரலாகி வருகிறது.**

பள்ளிப் பருவத்து மாணவர்களின் கல்விக்கு செல்போன் எவ்வாறு ஊறு விளைக்கிறது என்பது சொல்லித் தெரிவதல்ல. ஆசிரியர்கள், பெற்றோர்கள், கல்வியாளர்கள் மற்றும் அரசாங்கம்எனபலதரப்பிலும், சிறார் கையிலிருக்கும் செல்போன்கள் பெரும் சவாலாக மாறி வருகின்றன. அதிக நேரம் ஸ்மார்ட்போன் திரைகளை பார்ப்பது பார்வைத்திறன், மூளை வளர்ச்சி, மனப்பாங்கு உள்ளிட்டவற்றை நேரிடையாக பாதிக்கின்றன.

இவற்றுக்கு அப்பால் செல்போனில் கிடைக்கும் கட்டற்ற இணையம் அவர்களை தவறாக வழி நடத்தவும் காரணமாகிறது. சூது, பாலியல், போதை, வன்முறை என புதைகுழிகளில் சிக்கவும் வாய்ப்பாகிறது. இவற்றைத் தடுக்க வீடுகளில் பெற்றோர் மேற்பார்வையில் சிறாரின் செல்போன் பயன்பாட்டை கட்டுப்படுத்தலாம். ஆனால் வளர்ந்த நாடுகளில் மாணவர்களின் இன்னொரு விரலாக சேர்ந்திருக்கும் செல்போனை முடக்க அரசாங்கமே தலையிட வேண்டியதாகிறது.

இந்தியா போன்ற வளரும் நாடுகளில், கலாச்சார பின்னணியிலான குலையாத குடும்ப அமைப்பு காரணமாக, பிள்ளைகளின் செல்போன் பயன்பாட்டை கட்டுப்படுத்துவது ஒப்பீட்டளவில் எளிதாகிறது. பெரும்பாலான பள்ளிகளில் செல்போன் பயன்பாடு என்பது முழுவதுமாக தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால் வளர்ந்த நாடுகளில் செல்போனை தவிர்க்க இயலாத பாதுகாப்பு அம்சமாகவும், தகவல் தொடர்புக்கான அத்தியாவசிய சாத்தியமாகவும் பார்க்கிறார்கள். எனவே அத்தனை எளிதாக பள்ளிகளில் செல்போனை தடை செய்வது இயலாமல் போனது.

சிறார் மீதான அதிகரிக்கும் செல்போன் வாயிலான பாதிப்புகளை அடுத்து, ஐரோப்பிய நாடுகள் வரிசையில் இங்கிலாந்தும் தற்போது பள்ளிகளில் செல்போனுக்கு தடை விதித்திருக்கிறது. இதனை சுவாரசியமான வீடியோ ஒன்றின் வாயிலாக பிரதமர் ரிஷி சுனக்கே, நாட்டு மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார். 'மூன்றில் ஒரு மாணவரின் பள்ளிக்கல்வி செல்போனால் சீரழிவதாக' ஆய்வு தரவினை மேற்கோள் காட்டும் ரிஷி சுனக், செல்போனின் தொந்தரவினை ஒரு தேர்ந்த நாடக நடிகரின் தோரணையோடு விளக்கியதில், அந்த வீடியோ இணையத்தில் வைரலாகி உள்ளது.

# பிரதமர் மோடியுடன் இணைந்து பணியாற்ற காத்திருக்கிறேன்

## இந்தோனேசிய அதிபர்



**இந்தோனேசியா : பிப். 21,**

**இந்தோனேசியாவில் சில நாட்களுக்கு முன்புதான் அதிபர் தேர்தல் நடைபெற்று முடிந்தது. இதில் பெரும்பான்மை வாக்குகளை பெற்ற பிரபோவோ சுபியாண்டோ அந்நாட்டின் அதிபராக தேர்வு செய்யப்பட்டார். இதையடுத்து அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரபோவோவுக்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி தனது வாழ்த்துக்களை தெரிவித்தார்.**

இது தொடர்பான எக்ஸ் பதிவில் அவர், "அதிபர் தேர்தல் வெற்றிகரமாக நடைபெற்று முடிந்ததற்கு இந்தோனேசிய மக்கள் மற்றும் அதிபராக தேர்வாகி இருக்கும் பிரபோவோ சுபியாண்டோவுக்கு வாழ்த்துக்கள். இந்தியா மற்றும் இந்தோனேசியா இடையிலான உறவை மேம்படுத்தும் வகையில், புதிய தலைமையுடன் பணியாற்ற விரும்புகிறேன்," என்று குறிப்பிட்டிருந்தார்.

இதற்கு பதில் அளித்த இந்தோனேசிய அதிபர் தன்னை வாழ்த்திய பிரதமர் மோடிக்கு நன்றி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில் பிரதமர் மோடியுடன் இணைந்து பணியாற்ற ஆர்வமாக இருப்பதாக தெரிவித்துள்ளார். "எங்களது தேர்தல் குறித்த உங்களின் வாழ்த்து செய்திக்கு நன்றி பிரதமர் மோடி. இந்தியா மற்றும் இந்தோனேசியா இடையிலான உறவை அடுத்தக்கட்டத்திற்கு கொண்டு செல்ல நினைக்கும் உங்களின் உணர்வை நான் புரிந்து கொள்கிறேன். உங்களுடன் இணைந்து பணியாற்ற ஆவலுடன் காத்திருக்கிறேன்," என்று இந்தோனேசிய அதிபர் பிரபோவோ சுபியாண்டோ தனது எக்ஸ் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# உலக வரலாற்றில் முதல்மறையாக ஊழியர்களுக்கு 300% சம்பள உயர்வு அறிவித்தது கூகுள்




**அமெரிக்கா : பிப். 21,**

**கூகுள் நிறுவனம் தனது ஊழியர்களுக்கு திடீரென்று 300 சதவிகிதம் ஊதியத்தை உயர்த்தி வழங்குவதாக அறிவிப்பு வெளியிட்டுள்ளது. அதற்குக் காரணம் அதன் ஊழியர்கள் வெளியேறாமல் தக்க வைக்க வேண்டும் என்பதுதான்.**

அமெரிக்காவைச் சேர்ந்த AI ஸ்டார்ட்அப் Perplexity நிறுவனம் இப்போது கூகுள் ஊழியர்களை நல்ல சம்பளத்துடன் வேலைக்கு அமர்த்த தயாராக உள்ளது. Perplexity-யின் தலைமை நிர்வாக அதிகாரி இந்தியாவில் பிறந்த அரவிந்த் ஸ்ரீனிவாஸ். இவர் சென்னை ஐ.ஐ.டி யில் பட்டம் பெற்றவர்.

அரவிந்த் தனது பெர்பெக்சிட்டி AI நிறுவனத்துக்காக கூகுளின் திறமையான பணியாளர்களை மிக அதிக ஊதியத்தில் வேலைக்கு அமர்த்த தயாராக உள்ளார். இதற்காக சில கூகுள் ஊழியர்களை தொடர்பு கொண்டு நேர்காணல் நடத்தி வேலை வாய்ப்பு வழங்கப்பட்டது. அவர்களுக்கு கூகுளை விட சிறந்த ஊதியம் வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளது.

பெர்பெக்சிட்டி AI ஸ்டார்ட்-அப் நிறுவனத்தின் சிஇஓ அரவிந்த் ஸ்ரீனிவாஸ், தங்கள் ஊழியர்களை தொடர்பு கொண்டு ஆஃபர் லெட்டர் கொடுத்த ஊழியர்களின் தகவலை கூகுள் அறிந்துள்ளது. அதையடுத்து தனது திறமையான ஊழியர்களை இழக்க விரும்பாத கூகுள் நிறுவனம், தனது ஊழியர்களுக்கு 300 சதவீதம் சம்பளத்தை உயர்த்தி அதிரடியாக அறிவித்துள்ளது.

தொழில்நுட்ப நிறுவனங்கள் பலவும் ஊழியர்களை வேலையை விட்டு அனுப்பிக் கொண்டிருக்கும் நிலையில், கூகுளின் இந்த அறிவிப்பு பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. இதனால் குறிப்பிட்ட அந்த ஊழியர்கள் கூகுளை விட்டுச்செல்வதற்கு தயக்கம் காட்டுகிறார்கள்.

அரவிந்த் ஸ்ரீனிவாஸ், "நாங்கள் தொடர்பு கொண்ட மற்றும் நேர்காணல் செய்த ஊழியர்களுக்கு ஆபர் லெட்டர் வழங்கப்பட்டுள்ளன. அந்த ஊழியர்கள் நோட்டீஸ் பீரியட், ரிலீவிங் லெட்டர் உள்ளிட்ட சில செயல்முறைகளை முடித்துவிட்டு நிறுவனத்தை விட்டு வெளியேற வேண்டும். ஆனால் பெர்பெக்சிட்டியின் சலுகையால் கூகுள் இப்போது விழித்துக் கொண்டுள்ளது. கற்பனை செய்ய முடியாத சம்பள உயர்வை வழங்குகிறது. இதனால் ஊழியர்கள் வரத் தயங்குகிறார்கள்" என்கிறார்.

# ஹூதி தாக்குதல் எதிரொலி ஐரோப்பிய எண்ணெய் வணிகம் சரிவு



**புதுடெல்லி : பிப். 21,**

**செங்கடலில் ஹூதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் எதிரொலியாக இந்தியாவிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கான டீசல் எண்ணெய் வர்த்தகம் கடும் சரிவை சந்தித்துள்ளது.**

காஸாவுடனான போரில் ஹமாஸ் அமைப்பினருக்கு ஆதரவு அளிக்கும் வகையில் செங்கடல்வழியாகச்செல்லும் இஸ்ரேல் தொடர்புடைய கப்பல்கள் மீது ஹூதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். வணிக கப்பல் போக்குவரத்து மீதான தாக்குதல்களால் சர்வதேச வர்த்தகம் சீர்குலைவு ஏற்பட்டுள்ளது. இதன் எதிரொலியாக இந்தியாவிலிருந்துஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்பப்படும் டீசல் உள்ளிட்ட எரிபொருள் வணிகம் பாதிக்கப்பட்டுள்ளது.

செங்கடலில் நிலவும் பாதுகாப்பின்மை, ஆசியாவில் நிலவும் திட்டமிடப்படாத சுத்திகரிப்பு ஆலை பராமரிப்பு பணிகள், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இங்கிலாந்துக்கு அதிகரித்து சரக்குபோக்குவரத்து செலவு போன்ற காரணங்களால் கிழக்கு நாடுகளை விட, மேற்கு நாடுகளுக்கு சரக்குகளை அனுப்புவதற்கு சிறந்த வர்த்தக பொருளாதார சூழலை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், இந்த மாதத்தின் முதல் இரண்டு வாரங்களில் இந்தியாவில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு எரிபொருள் வருகை சராசரியாக ஒரு நாளுக்கு 18 ஆயிரம் பீப்பாய்களாக கடும் வீழ்ச்சியை சந்தித்துள்ளது. கடந்த ஜனவரி மாத சராசரியுடன் ஒப்பிடும்போது இது 90 சதவீதத்துக்கும் அதிகமான சரிவு என வணிக தரவுகள் தெரிவிக்கின்றன.

கிழக்கு சிங்கப்பூர் பிராந்தியத்துக்கு ஏற்றுமதி செய்வதற்கான பொருளாதாரம் மேற்கத்திய நாடுகளை விட மிகவும் சிறப்பாக உள்ளது என ஸ்பார்டா வணிக சரக்கு ஆய்வாளர் ஜேம்ஸ் நோயல்-பெஸ்விக் கூறியுள்ளார்.

ஐரோப்பிய நாடுகள் அல்லது அட்லாண்டிக் பேசின் (அமெரிக்கா) செல்லும் கப்பல்கள் ஹூதி அச்சுறுத்தலால் தென்னாப்பிரிக்காவின் 'கேப் ஆஃப் குட் ஹோப்' ஐ சுற்றிச் செல்லும் கட்டாயத்துக்கு தள்ளப்பட்டுள்ளன. இதனால் பயண தூரம் அதிகரித்து கூடுதல் செலவுகள் ஏற்படுகின்றன. இதை தவிர்க்க, சூயஸ் கால்வாயைப் பயன்படுத்தலாம் என்றால் அதில் கூடுதல் அபாயங்கள் உள்ளன. இந்த காரணங்களால் ஐரோப்பிய நாடுகளுக்கு சரக்கு கப்பல் போக்குவரத்து பாதிக்கப்பட்டு, அங்கு அனுப்பப்படும் எரிபொருள் வர்த்தகம் குறைந்துள்ளது.

இதன் காரணமாக 'பீஸ் விக்டோரியா', 'ஆரஞ்சு விக்டோரியா' போன்ற வணிக கப்பல்கள் ஐரோப்பிய பிராந்தியத்திலிருந்து கிழக்கு ஆசியாவுக்கு இடம்பெயர்ந்து வருகின்றன.

# ஆசியாவின் சிறந்த ஆண் கலைஞர் விருது வென்ற BTS-ன் ஜங்குக்



**அமெரிக்கா : பிப். 21,**

**49-வது பீப்பிள்ஸ் சாய்ஸ் விருதுகள் விழா கலிபோர்னியாவின் சாண்டா மோனிகாவில் நடந்தது. 1975-ம் ஆண்டு முதல் 'மக்கள் தேர்வு' விருது வழங்கும் விழா நடந்து வருகிறது.**

பாப் பாடல், இசை, திரைப்படம் மற்றும் தொலைக்காட்சியில் சிறந்தவர்களை கவுரவிக்க இந்த விருது வழங்கப்படுகிறது. இந்த ஆண்டுக்கான சிறந்த ஆண் கலைஞர்' விருதை 'BTS' இசைக்குழுவை சேர்ந்த ஜங்குக் பெற்றுள்ளார். மக்களின் விருப்பத்தின்பேரில் தேர்வு செய்யப்படும் இவ்விருதை பெறும் ஆசியாவைச் சேர்ந்த முதல் கலைஞர் என்ற பெருமையை ஜியோன் ஜங்குக் பெற்று உள்ளார்.

தற்போது ஜங்குக் ராணுவத்தில்சேர்ந்துள்ளதால் விருதை நேரில் பெற வர முடியவில்லை. கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் "கோல்டன்' தனி ஆல்பத்தின் மூலம் இவர் அறிமுகமாகி பிரபலம் அடைந்தார். இந்த விருது கிடைத்த செய்தி அறிந்ததும் அவரது ரசிகர்கள் ஜங்குக்வுக்கு இணையதளத்தில் வாழ்த்துச் செய்திகளை வெளியிட்டு வருகின்றனர்.







புதுக்கோட்டையின் அடையாளங்களில் ஒன்றான பேக்கரி மஹராஜ் நிறுவனத்தின் புதிய கிளை புதுக்கோட்டை அறந்தாங்கி சாலையில் மேட்டுப்பட்டியில் புதிதாக திறக்கப்பட்டது. திறப்பு விழாவில் வர்த்தக, வணிகர்கள், பல்வேறு அரசியல் கட்சி பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் பேக்கரி மஹராஜ் நிர்வாக இயக்குனர் அருண்ராஜ் வரவேற்று கவுரவித்தார்.



புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில், தோட்டக்கலை - மலைப்பயிர்கள் துறையின் சார்பில், தேசிய தோட்டக்கலை இயக்கத்தின்கீழ் நடைபெற்ற மாவட்ட அளவிலான பழப்பயிர்கள் சாகுபடி குறித்த தொழில்நுட்ப கருத்தரங்கத்தினை, மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா நேற்று (20.02.2024) குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து, தொழில்நுட்ப கையேட்டினை வெளியிட்டார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி, இணை இயக்குநர் (வேளாண்மை) பெரியசாமி, துணை இயக்குநர் (தோட்டக்கலைத்துறை) அழகுமலை, துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) சங்கரலெட்சுமி, செயற்பொறியாளர் (வேளாண் பொறியியல்துறை) செல்வம் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.






## கருப்பாநதி அணைக்கட்டு பகுதி மலைவாழ் மக்களுக்கு மருத்துவ உதவி



தென்காசி, பிப். 21-

தென்காசி மாவட்டம்- கடையநல்லூர் நகராட்சி1-வது வார்டுக்கு உட்பட்ட மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் அமைந்துள்ள கருப்பாநதி அணை கட்டு பகுதியில் கலைமான் நகர் பழங்குடியினர் நூற்றுக்கும்மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர், கடையநல்லூர் நகர்மன்ற உறுப்பினர் ரேவதி கருப்பாநதி அணைக்கட்டுபகுதியில் நிறைய மக்கள் உடல்நிலை பாதிக்கப்பட்டு உள்ளனர் என்ற தகவல் தெரிந்தவுடன் அவர்களை நேரில் சென்று பார்வையிட்டு உடனே மருத்துவ வசதி ஏற்பாடு செய்யப்பட்டது.

அதன்படி மருத்துவம் மற்றும் சுகாதார அலுவலர்கள் கலைமான் நகர்பகுதி மக்கள் நலனை கருத்தில் கொண்டு காய்ச்சல் மற்றும் உடல்நிலைபாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு மருத்துவ முகாமிற்கு ஏற்பாடு செய்து மருந்து மாத்திரைகள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கி, ஊசி போடப்பட்டது. டெங்கு காய்ச்சல் போன்ற தொற்றுநோய் தொற்றினைபற்றி விழிப்புணர்வுமுகாம் ஏற்பாடு செய்யப்பட்டது.மேலும் இப்பகுதி மக்களின் கோரிக்கையை ஏற்று ஒவ்வொருபிரதி மாதம் 1ம் தேதி மருத்துவமுகாம் நடத்த முடிவு செய்யப்பட்டது, நிகழ்ச்சி ஏற்பாடு பிஜேபி மாவட்ட பொறுப்பாளர் பாலீஸ்வரன் அனைவரையும் வரவேற்று மருத்துவ உதவி அளிக்கப்பட்டது.



திருவரங்குளம் தெற்கு ஒன்றிய திமுக சார்பில் வல்லத்ராகோட்டை தெற்கு ஒன்றிய திமுக அலுவலகத்தில் ஒன்றியச் செயலாளர் அரு வடிவேல் தலைமையில் முன்னாள் புதுக்கோட்டை மாவட்ட திமுக செயலாளர் கே.பி.கே தங்கவேலு நினைவு நாளை முன்னிட்டு அவரது படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர், இதில் தெற்கு ஒன்றிய திமுக நிர்வாகிகள் இளைஞர் அணி உள்ளிட்ட பல்வேறு அணி அமைப்பாளர்கள் உறுப்பினர்கள் திமுக முன்னோடிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### புதுக்கோட்டையில் நகராட்சிக்கு சொந்தமான சாலை

## ஆக்கிரமிப்பு மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்குமா? பொதுமக்கள் எதிர்பார்ப்பு



புதுக்கோட்டை , பிப்.21-

புதுக்கோட்டை நகராட்சி வார்டு எண் 34-க்குட்பட்ட திருவள்ளுவர் நகர் அருகே உள்ள ராமசாமி கோனார் காலனியில் நகராட்சிக்கு சொந்தமான பொது சாலை உள்ளது. இந்த சாலையை நகராட்சி நிர்வாகம் சரியான முறையில் பராமரிக்காதாலும், அலட்சியமாக இருந்ததால் கேட்பாறின்றி கிடந்த இந்த சாலையை தனிநபர் ஒருவர் படி படியாக ஆக்கிரமிப்பு செய்து இந்த சாலையை சுற்றி வேலி அமைத்து தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இந்த சாலை புதுக்கோட்டை நகராட்சி ஆணையரால் நி.மு.12059/64 நாள் 31.3.1965 அன்று ஒப்புதல் செய்யப்பட்டு நகராட்சி சாலை என வகைப்படுத்தப்பட்ட சாலையாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி சாலையை சட்டவிரோதமாக எந்த ஒரு மூல ஆவணம் மற்றும் முகாந்திரம் இல்லாமல் ரயத்துவாரி புஞ்சை இடத்தை நத்தம் என்று நத்தம் நிலவரி திட்ட வட்டாட்சியரால் வழங்கப்பட்டதாக கூறிக்கொண்டு பட்டா வைத்துக்கொண்டு பொதுமக்கள் பயன்படுத்தும் சாலையை பட்டா எண் -17788 சர்வே எண் - 9916/45A2 வைத்துக்கொண்டு புதுக்கோட்டை பத்திரப்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரப்பதிவு செய்யும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது குறித்து கோட்டாட்சியர், மற்றும் வட்டாட்சியர், நத்தம் தனி வட்டாட்சியர், நகராட்சி ஆணையரிடமும் புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக மாவட்ட நிர்வாகம் தலையிட்டு பொது மக்கள் பயன்படுத்தும் சாலையைமீட்டு பட்டா வைத்துள்ள தனிநபரிடம் தகுந்த விசாரணை நடத்தி அரசு சாலையை போலி பட்டா மூலம் ஆக்கிரமித்துள்ள நபர் மீது சட்ட நடவடிக்கை எடுக்குமாறும், மேற்கண்ட சாலையை பதிவாளர் அலுவலகத்தில் எந்த அடிப்படையில் பதிவு செய்ய முயற்சிக்கின்றனர் என்பது குறித்து தீவிர விசாரணை மேற்கொண்டும், இதற்கு உறுதுணையாக இருக்கும் நிர்வாகிகளை விசாரணை செய்து தக்க நடவடிக்கை மேற்கொண்டு ஆக்கிரமிப்பு செய்துள்ள இடத்தை மீட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வழிவகை செய்யுமாறு அப்பகுதி பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் மாவட்ட நிர்வாகத்திற்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

## வடகாட்டில் காங்கிரஸ் கட்சியினர் ஆர்ப்பாட்டம்



ஆலங்குடி, பிப்.21-

ஆலங்குடி அருகேயுள்ள வடகாட்டில் காங்கிரஸ் கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகேயுள்ள வடகாடு வடக்கு கடைவீதியில் ஊராட்சித் தலைவர் எஸ். மணிகண்டன் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், காங்கிரஸ் கட்சியின் வங்கிக் கணக்கை முடக்கிய மத்திய பாஜக அரசைக் கண்டித்தும், தில்லியில் போராடும் விவசாயிகளுக்கு ஆதரவாகவும் முழக்கங்கள் எழுப்பினர்.ஆர்ப்பாட்டத்தில், கட்சியின் தெற்கு மாவட்டத் தலைவர் ராம.சுப்புராம், வட்டாரத் தலைவர் பன்னீர்செல்வம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.






## தமிழ் இசை சமுதாயம் புறக்கணித்த மாபெரும் இசைக்கலைஞன் "அம்மன்பக்தி பாடல்கள் புகழ்" புதுகை மணிமாறனை தெய்வங்களும் கைவிட்ட அவலம்



புதுக்கோட்டை , பிப்.21-

கலைஞர்கள் எப்போது பிறப்பார்கள் அவரது படைப்புகள் எப்பொழுது பிரபலமாகும் அந்தப் படைப்புகளால் அவர் பயன் பெறுவாரா என்பதெல்லாம் அவரவர் செய்த பாக்கியம் தான்.பக்திபாடல்கள்என்றாலே நம் நினைவுக்கு வருவது எல்.ஆர்.ஈஸ்வரி, வீரமணி உள்ளிட்ட பிரபலங்கள் தான் ஆனால் சத்தம் இல்லாமல் புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒரு சிறு கிராமமான புள்ளான்விடுதியில் பிறந்து எண்ணற்ற பக்தி ரசம் சொட்டும்பாடல்கள் நம்மையே ஆட்கொள்ளச்செய்யும் அருமையான அம்மன் பாடல்களை இயற்றி இசையமைத்து அதன் பலனை அனுபவிக்காமல் மறைந்த புதுகை மணிமாறன் பற்றிய ஒரு சிறிய தொகுப்பு;

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே உள்ள புள்ளான்விடுதி கிராமத்தை சேர்ந்தவர் மணிமாறன் வறுமை சூழ்ந்திடவே வளர்ந்த மணிமாறன் ஆரம்பக் கல்வியை முடித்த பின்னர் வறுமை அவரது குடும்பத்தை வாட்ட பிழைப்பு தேடி ஒரு சைக்கிள் ரிக்சா ஓட்டியாக புதுக்கோட்டைக்கு வந்தார். அங்கு அவரது உறவினர் வீட்டில் தங்கி தனது இளமைப் பருவத்தை தொடங்கிய மணிமாறன் அவ்வப்போது பக்தியின் காரணமாக ஐயப்பன் கோவிலுக்கு மாலை அணிந்து செல்வது வழக்கம். மாலை அணிந்த காலகட்டத்தில் சக பக்தர்கள் மற்றும் நண்பர்கள் உடன் பஜனை பாடல்கள் பாடும் பொழுது இவரது குரலில் ஒரு கம்பீரமான பக்தி எதிரொலிக்கவே அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் இவரையே அழைக்க தொடங்கினர்.

இப்படியே தொடங்கிய இசை பயணம் ஒரு கட்டத்தில் இறைவன் கிருபையால் சொந்தமாக பாடல்களை இயற்றி மெட்டு அமைத்து பாடும் வல்லமையை அந்தக் கடவுள் இவருக்கு வழங்கினார். டெக்னாலஜி வளராத காலகட்டத்தில் இவர் மெட்டமைத்த பாடல்கள் தொகுப்பாக சபரிமலை ஐயப்பன், முத்துமாரியம்மன் பாடல்கள் அடங்கிய கேசட்டுக்களாக போட்டு கடைகடைகளாக சென்று விற்கத் தொடங்கினர். அந்த காலகட்டத்தில் புதுக்கோட்டை பஸ் ஸ்டாண்ட் எதிரியே உள்ள ஒரு கடையில் வாடகை சைக்கிளை எடுத்துக்கொண்டு கேசட் விற்று வாழ்க்கையை நடத்தி வந்தார்.

அப்பொழுது செல்போன் டிஜிட்டல் மையம் எதுவும் இல்லை இவரது கேசட்டுகளை விற்பனை விற்பனை செய்ய சோனி, சிம்பொனி என மார்க்கெட்டிங் செய்ய அவருக்கு பரிந்துரை செய்ய யாரும் வராத நிலையில் வறுமையுடனே போராடி வந்தார். பல்வேறு புதிய கோயில்களில் கும்பாபிஷேக நிகழ்ச்சிகள் அவ்வப்பொழுது பாடி வந்தார். புதிய கோயில்களுக்கும் இசையமைத்து அந்த கோயிலின் பெருமைகளை அந்த தெய்வத்தின் மகத்துவத்தை அழகான பாடல்கள் மூலம் பாடியும் வந்தார்.

தற்பொழுது புதுகை மணிமாறன் பாடல்கள் ஒலிக்காத எந்த அம்மன் கோயிலும் கிடையாது. அந்த அளவிற்கு பிரபலம் அடைந்து விட்டது. ஆனால் அவரது காலகட்டத்தில் வறுமையுடனே வாழ்ந்து வந்த மணிமாறன் தன் படைப்பின் பலனை அடையாமலே மதுவுக்கு அடிமையாகி இறந்து கிடப்பது யாரென தெரியாமலே இவ்வுலகை விட்டு மறைந்தார். அறிவு, திறமை, ஞானம் இருந்தாலும் போதுமான கவர்ச்சியும் அவசியம் என்பது மணிமாறனுக்கும் பொருந்தும். யார் யாரையோ கொண்டாடும் இந்த இசை உலகம் புதுகை மணிமாறனை கடைசிவரை புரிந்து கொள்ளாமலே கைவிட்டது மிகவும் வருந்தத்தக்க விஷயம்.

இவர் எழுதிய அனைத்து பாடல்களும் இன்றளவுக்கும் நம்மை மெய்சிலிர்க்க வைக்கும் காலம் முழுவதும் முத்துமாரியம்மன் பாடல்களை பாடிய மணிமாறனை அந்த தெய்வங்களும் கைவிட்டது ஆச்சரியமான விஷயம் தான் இப்போதாவது இவரது படைப்புகளை முறைப்படுத்தி அவரது சந்ததிகளுக்கோ அவர்கள் புகழ் பாடுவதற்கோ ஆவணம் செய்ய இந்த இசை சமுதாயம் முயற்சிக்க வேண்டும் என்பது புதுகை வரலாறின் எதிர்பார்ப்பு.

புதுக்கோட்டையில் எத்தனை அரசியல் ஜாம்பவான்கள் இருந்தும் இவரை பெருமைப்படுத்த மறந்தது ஏனோ? தெரியவில்லை. இவர் எழுதி இசையமைத்து பாடிய ஆகச்சிறந்த பாடல்களின் பட்டியல் இதோ சில; பொன்மகளே தேவியம்மா, ஆங்கார ரூபம் கொண்டு, கருணை உள்ளத்தோடு கருமாரி வருகிறாள், சிவப்பு சேலையில காட்சி தருவா, எங்க முத்து மாரியம்மா தங்க முத்து மாரியம்மா, வெண்கல தேரில் பவனி வருகிறாள் வெங்கல பிடாரி என எண்ணற்ற பாடல்களை எழுதி இசையமைத்து பாடியுள்ளார்.

**தொகுப்பு;**
**ஜி.ஆர்.பிரணவேஷ்**

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

# ஆசிய உள்ளரங்க தடகளம்

## கடைசி நாளில் இந்தியாவுக்கு மேலும் ஒரு தங்கப்பதக்கம்

**டெக்ரான் : பிப். 21,**

**ஆண்களுக்கான 3000 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் இந்தியாவின் குல்வீர் சிங் தங்கம் வென்றார்.**



11-வது ஆசிய உள்ளரங்க தடகள சாம்பியன்ஷிப் போட்டி ஈரான் தலைநகர் டெக்ரானில் 3 நாட்கள் நடைபெற்றது. கடைசி நாளான நேற்று முன்தினம் திங்கள்கிழமை நடந்த ஆண்களுக்கான 3 ஆயிரம் மீட்டர் ஓட்டத்தில் இந்திய வீரர் குல்வீர் சிங் 8 நிமிடம் 07.48 வினாடிகளில் இலக்கை கடந்து தங்கப்பதக்கத்தை தட்டிச் சென்றார்.

கிர்கிஸ்தானின் நுர்சுல்தான் வெள்ளிப்பதக்கமும் (8நிமிடம் 08.85 வினாடி), ஈரானின் ஜலில் நசேரி வெண்கலமும் (8 நிமிடம் 09.39 வினாடி) வென்றனர். இதன் பெண்கள் பிரிவில் இந்திய வீராங்கனை அங்கிதா 9 நிமிடம் 26.22 வினாடிகளில் 2-வதாக வந்து வெள்ளிப்பதக்கத்தை கைப்பற்றினார். இந்த சாம்பியன்ஷிப்பில் இந்தியா 4 தங்கம், ஒரு வெள்ளியுடன் போட்டியை நிறைவு செய்துள்ளது.

# ரூ.17.47 கோடி செலவில் ஒலிம்பிக் அகாடமி சென்னையில் திறப்பு

**சென்னை : பிப். 21,**

**ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கம் வெல்பவர்களை உருவாக்கும் வகையில் சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம் வளாகத்தில் தமிழக அரசு சார்பில் ரூ.17.47 கோடி செலவில் ஒலிம்பிக் அகாடமி கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.**

மூன்றடுக்கு கொண்ட இந்த அகாடமியின் தரைதளத்தில் பன்நோக்கு விளையாட்டுத் தளம், முதல் தளத்தில் டேக் வாண்டோ மற்றும் ஜூடோ விளையாட்டுத் தளம், இரண்டாவது தளத்தில் வாள்வீச்சு தளம் மற்றும் மூன்றாவது தளத்தில் விளையாட்டு அறிவியல் மையம் அமைக்கப்பட்டுள்ளது.

இவற்றை நேற்று முன்தினம் திங்கள்கிழமை சென்னை நேரு விளையாட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்துவைத்தார்.

தொடர்ந்து தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மறுசீரமைக்கப்பட்ட, மேம்படுத்தப்பட்ட www. sdat. tn.gov.in என்ற இணையதளத்தையும், இணையதள சேவைகளான விளையாட்டரங்க பதிவு, உறுப்பினர் பதிவு, உயரிய ஊக்கத்தொகை இணையவழி விண்ணப்பம் மற்றும் முதல்வர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் சான்றிதழ்களை இணையதளம் வாயிலாக பெறுதல் ஆகிய சேவைகளையும் அமைச்சர் தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாதரெட்டி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



தொடர்ந்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கூறும்போது, "கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டில் முதன்முறையாக தமிழகம் 2-வது இடம் பிடித்து சாதனை படைத்தது. இந்த போட்டியில் பங்கேற்ற வீரர், வீராங்கனைகள் விரைவில் கவுரவிக்கப்படுவார்கள். தமிழக பட்ஜெட்டில் விளையாட்டு துறைக்கு ரூ.440 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதி போதாவிட்டால் முதல்வரிடம் கூடுதலாக கேட்டுப் பெறுவோம். பார்முலா கார் பந்தயம் நடத்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும். இந்த போட்டியை நடத்துவதற்கு கூடுதல் ஸ்பான்சர்களை தேடுவோம்" என்றார்.

தமிழக அரசின் 2024-25 நிதியாண்டுக்கான பட்ஜெட்டை சட்டப்பேரவையில் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று முன்தினம் திங்கள்கிழமை தாக்கல் செய்தார். அதில் கூறியிருப்பதாவது:

விளையாட்டு போட்டிகளின் தலைமையகமாக தமிழகத்தை மாற்றவும், ஒலிம்பிக் பதக்க வெற்றியாளர்களை உருவாக்கவும், சென்னை, மதுரை, திருச்சி, நீலகிரி மாவட்டங்களில் 4 ஒலிம்பிக் பயிற்சி மையங்கள் நிறுவப்படும். இறகு பந்து, கையுந்துபந்து, கூடைப்பந்து, தடகளம் உள்ளிட்ட விளையாட்டுகளுக்கு இங்கு உலகத்தரத்தில் பயிற்சி வழங்கப்படும். இவை விளையாட்டு அறிவியலுக்கான மையங்களாக செயல்படும். அனைத்து ஊராட்சிகளுக்கும் 33 விளையாட்டுகள் மற்றும் உடற்பயிற்சிக்கான கருவிகள் அடங்கிய கலைஞர் விளையாட்டு தொகுப்புகள் வழங்கப்படும்.

கடல்சார் நீர் விளையாட்டுகளில் இளைஞர்களின் ஆர்வத்தை ஈர்க்கவும், நீர் விளையாட்டு போட்டிகளுக்கான உலகத் தரம் வாய்ந்த கட்டமைப்பை ஏற்படுத்தவும் நாட்டிலேயே முதல்முறையாக ராமநாதபுரம் மாவட்டம் பிரப்பன்வலசையில் தமிழ்நாடு ஒலிம்பிக் நீர் விளையாட்டு அகாடமி அமைக்கப்படும். இதற்காக, இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டு துறைக்கு ரூ.440 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# உலக டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் உஸ்பெகிஸ்தானை வீழ்த்தியது இந்திய மகளிர் அணி

**பூசான் : பிப். 21,**

**உலக டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப்பில் மகளிர் பிரிவில் இந்திய அணி 3-0 என்ற கணக்கில் உஸ்பெகிஸ்தானை வீழ்த்தியது.**



தென் கொரியாவின் பூசான் நகரில் உலக டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டி நடைபெற்று வருகிறது. இதில் இந்திய மகளிர் அணி, உஸ்பெகிஸ்தானுடன் மோதியது. ஒற்றையர் பிரிவு ஆட்டங்களில் இந்தியாவின் அர்ச்சனா காமத் 11-7, 11-3, 11-6 என்ற செட்கணக்கில்ரிம்மாகு ஃப்ரா னோவை தோற்கடித்தார். 2-வது ஆட்டத்தில் தியா சித்தலே 11-6, 10-12, 11-4, 11-6 என்ற செட் கணக்கில் ரோசலினா கதீவாவை வீழ்த்தினார். நட்சத்திர வீராங்கனையான மணிகா பத்ரா 11-7, 11-4, 11-1 என்ற செட் கணக்கில் மர்ஹபோ மக்தீவாவை தோற்கடித்தார்.

இந்த தொடரில் 3 ஆட்டங்களில் விளையாடி உள்ள இந்திய மகளிர் அணி 2 வெற்றி, ஒரு தோல்வியுடன் குரூப் 1-ல் 2-வது இடத்தில் உள்ளது. சீனாவிடம் 2-3 என தோல்வி அடைந்திருந்த இந்திய மகளிர் அணியானது 2-வது ஆட்டத்தில் ஹங்கேரியை 3-2 என்ற கணக்கில் வீழ்த்தியிருந்தது.

ஆடவர் பிரிவில் இந்திய அணி, கொரியாவுடன் மோதியது. இதில் இந்திய அணி 0-3 என்ற கணக்கில் தோல்வியை சந்தித்து. ஒற்றையர் பிரிவு ஆட்டங்களில் இந்தியாவின் ஷரத் கமல் 9-11, 11-8, 6-11, 5-11 என்ற செட் கணக்கில் லீ சான் சுவிடம் தோல்வி அடைந்தார். தேசிய சாம்பியனான ஹர்மீத் தேசாய் 411, 10-12,8-11 என்ற செட் கணக்கில் உலகத் தரவரிசையில் 14-வது இடத்தில் உள்ள ஜாங் வூஜினிடம் வீழ்ந்தார். ஜி.சத்தியன் 5-11, 7-11, 7-11 என்ற செட் கணக்கில் உலகத் தரவரிசையில் 16-வது இடத்தில் உள்ள லிம் ஜாங்ஹூனிடம் தோல்வி அடைந்தார்.

# 'மெஸ்ஸியும் இல்லை, ரொனால்டோவும் இல்லை' – எடன் ஹசார்ட் கருத்து

**பிரஸ்ஸல்ஸ் : பிப். 21,**

**கால்பந்தாட்ட உலகின் தலைசிறந்த வீரர் யார் என்பது குறித்த தனது கருத்தை தெரிவித்துள்ளார் பெல்ஜியம் நாட்டு அணியின் முன்னாள் கேப்டன் எடன் ஹசார்ட். அது மெஸ்ஸியும் இல்லை, ரொனால்டோவும் இல்லை என அவர் தெரிவித்துள்ளார்.**

கால்பந்தாட்ட உலகின் ஜாம்பவான்களின் பட்டியலில் அர்ஜென்டினாவின் மெஸ்ஸியும், போர்ச்சுகலின் ரொனால்டோவும் நிச்சயம் இருப்பார்கள். இவர்கள் இருவரில் யார் தலைசிறந்தவர் (GOAT) என்ற ஒப்பீடுகள் ரசிகர்கள் மத்தியில் எப்போதுமே இருந்து கொண்டே இருக்கும். அது அவர்கள் தேசிய அணிக்காக விளையாடினாலும், கிளப் அணிக்காக விளையாடினாலும் நீடிக்கும். அவ்வப்போது இருவரது கையும் ஒருவருக்கு ஒருவர் ஓங்கி நிற்கும்.

இந்த சூழலில் இது குறித்து தனது கருத்தை எடன் ஹசார்ட் தெரிவித்துள்ளார். அவர் கலந்து கொண்ட பாட்காஸ்ட் நிகழ்ச்சியில் 'மெஸ்ஸி அல்லது ரொனால்டோ: இருவரில் யார் தலைசிறந்த வீரர்?' என்ற கேள்வி முன்வைக்கப்பட்டது.



"என்னைப் பொறுத்தவரை மெஸ்ஸி தான். கால்பந்து குறித்து பேசினால் அவரது பெயர் நிச்சயம் நினைவுக்கு வரும். இதில் சிலருக்கு மாற்று கருத்து இருக்கலாம். ரொனால்டோ சிறந்த கோல் ஸ்கோரர். அதோடு அணிக்கு கோப்பைகளைக் வென்று கொடுக்கும் தலைசிறந்த வீரரும் கூட. ஆனால், என்னைப் பொறுத்தவரையில் ஜினாடின் ஜிடான் தான் தலைசிறந்த வீரர்" என அவர் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் நாட்டு அணிக்காக 1994 முதல் 2006 வரையில் சர்வதேச கால்பந்து போட்டிகளில் ஜிடான் விளையாடியவர். அட்டேக்கிங் மிட்-ஃபீல்டர். பிரான்ஸ் அணிக்காக 108 போட்டிகளில் விளையாடி 31 கோல்கள் பதிவு செய்துள்ளார். 1998-ல் சாம்பியன் பட்டம் வென்ற உலகக் கோப்பை அணியில் விளையாடியவர். 2006 உலகக் கோப்பை தொடரில் சிறந்த வீரருக்கான விருதை வென்றவர்.

# டி20 உலகக்கோப்பை; இந்திய அணியை தலைமை தாங்குவதற்கு ரோகித் சர்மாதான் சரியான தேர்வு – சவுரவ் கங்குலி

**புதுடெல்லி : பிப். 21,**

**2024 டி20 உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர் வெஸ்ட் இண்டீஸ் மற்றும் அமெரிக்காவில் ஜூன் மாதம் நடைபெற உள்ளது.**

2024 டி20 உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர் வெஸ்ட் இண்டீஸ் மற்றும் அமெரிக்காவில் ஜூன் மாதம் நடைபெற உள்ளது. இந்த தொடரில் மொத்தம் 20 அணிகள் கலந்து கொள்ள உள்ளன. அதன்படி அமெரிக்கா, வெஸ்ட் இண்டீஸ், ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, இந்தியா, நெதர்லாந்து, நியூசிலாந்து, பாகிஸ்தான், தென் ஆப்பிரிக்கா, இலங்கை, ஆப்கானிஸ்தான், வங்காளதேசம், அயர்லாந்து, ஸ்காட்லாந்து, பப்புவா நியூ கினியா, கனடா, நேபாளம், ஓமன், நமீபியா மற்றும் உகாண்டா ஆகிய அணிகள் கலந்து கொள்ளும் 20 அணிகள் 4 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.



அதன்படி பிரிவு ஏ-ல் இந்தியா, பாகிஸ்தான், அயர்லாந்து, கனடா, அமெரிக்கா அணிகளும், பிரிவு பி-ல் இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, நமீபியா, ஸ்காட்லாந்து, ஓமன் அணிகளும், பிரிவு சி-ல் நியூசிலாந்து, வெஸ்ட் இண்டீஸ், ஆப்கானிஸ்தான், உகாண்டா, பாபுவா நியூ கினியா அணிகளும், பிரிவு டி-ல் தென் ஆப்பிரிக்கா, இலங்கை, வங்காளதேசம், நெதர்லாந்து, நேபாளம் அணிகளும் இடம் பெற்றுள்ளன.

ஒவ்வொரு அணியும் தங்கள் பிரிவில் உள்ள மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் சுற்றின் முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள் சூப்பர் 8 சுற்றுக்கு முன்னேறும். இதிலிருந்து 4 அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும். இந்நிலையில் இந்த தொடரில் ரோகித் சர்மாதான் இந்திய அணியை வழிநடத்துவார் என பி.சி.சி.ஐ செயலாளர் ஜெய்ஷா கடந்த சில தினங்களுக்கு முன்னர் கூறியிருந்தார். இந்நிலையில், டி20 உலகக்கோப்பை தொடரில் இந்திய அணியை தலைமை தாங்குவதற்கு ரோகித் சர்மாதான் சரியான தேர்வு என இந்திய முன்னாள் வீரர் சவுரவ் கங்குலி கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது,

டி20 உலகக்கோப்பைக்கான இந்திய கேப்டனாக செயல்பட ரோகித் சர்மாதான் சரியான தேர்வு. நடந்து முடிந்த 50 ஓவர் உலகக்கோப்பையில் அவர் இந்திய அணியை வழிநடத்தி 10 போட்டிகளில் வெற்றி பெற்ற விதம் இன்னும் நம் நினைவில் உள்ளது. எனவே, ரோகித் சிறந்த தேர்வாக இருப்பார் என்று கூறினார்.

# தமிழக அரசின் உதவியை எதிர்பார்க்கும் பார்வையற்றோர் கிரிக்கெட் அணி வீரர்

**கோவில்பட்டி : பிப். 21,**

**தூத்துக்குடி மாவட்டம் எப்போதும் வென்றான் அருகே உள்ள துரைச்சாமிபுரம் கிராமத்தைச் சேர்ந்தவர் விவசாயி சிவசுப்பிரமணியன். இவரது மகன் மகாராஜா (23). பார்வையற்ற மாற்றுத்திறனாளியான இவர், இளங்கலை பட்டப்படிப்பு படித்துள்ளார்.**

இடது கை வேகப்பந்து வீச்சாளரான மகாராஜா, கடந்த ஆகஸ்ட் மாதம் இங்கிலாந்து நாட்டில் நடைபெற்ற உலக பார்வையற்றோருக்கான விளையாட்டு போட்டிகளில், இந்திய கிரிக்கெட் அணியில் இடம்பெற்றார். இப்போட்டியில் தமிழ்நாட்டில் இருந்து பங்கேற்ற ஒரே நபர் இவர்.

அப்போது பயிற்சியின்போது தலையில் காயம் ஏற்பட்டதால், இந்திய அணி விளையாடிய 6 போட்டிகளில், 3 ஆட்டங்களில் மட்டும் பங்கேற்றார். இந்த போட்டியில் இந்திய அணி 2-வது இடம் பிடித்து வெள்ளிப் பதக்கம் வென்றது.

"போட்டியில் பங்கேற்ற மற்ற மாநிலத்தைச் சேர்ந்த வீரர்களுக்கு, அந்தந்த மாநில அரசுகள் பரிசுத்தொகை வழங்கி கவுரவப்படுத்தி உள்ளன. ஆனால், தமிழ்நாடு அரசு தனக்கு அங்கீகாரம் வழங்கவில்லை" என, மகாராஜா கவலையுடன் தெரிவித்தார்.

இந்நிலையில், துபாய் நாட்டில் பிப்ரவரி 22-ம் தேதி முதல் 25-ம் தேதி வரை இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் நாடுகளைச் சேர்ந்த பார்வையற்றோர் அணிகள் பங்கேற்கும் கிரிக்கெட் போட்டி நடைபெற உள்ளது. இதில், மகாராஜா இந்திய அணியில் பங்கேற்று விளையாட உள்ளார்.



இதுகுறித்து அவர் கூறியதாவது: தந்தை சிவசுப்பிரமணியன் இறந்துவிட்ட நிலையில், தாய் சண்முகக்கனி நூறு நாள் வேலை திட்டத்தில் பணியாற்றி வருகிறார். பாளையங்கோட்டை பார்வையற்றோர் பள்ளியில் படித்தபோது, அங்குள்ள மாணவர்களுடன் இணைந்து கிரிக்கெட் விளையாடினேன். எனக்கு பேட்டிங், இடது கை வேகப்பந்து வீச்சு கைகொடுத்தது.

திருநெல்வேலி மாவட்ட அணிக்காக விளையாடி உள்ளேன். கடந்த 2018-ம் ஆண்டு முதல் தமிழ்நாடு பார்வையற்றோர் அணிக்காக விளையாடி வருகிறேன். கடந்த ஆண்டு இந்திய அணிக்கு தேர்வு பெற்று, இங்கிலாந்தில் நடந்த உலக பார்வையற்றோர் விளையாட்டு போட்டிகளில், கிரிக்கெட் போட்டியில் விளையாடினேன். தற்போது துபாயில் நடைபெற உள்ள போட்டியில் இந்திய அணிக்காக விளையாட 2-வது முறையாக தேர்வாகி உள்ளேன்.

இந்திய அணியில் உள்ள மற்ற வீரர்கள் அந்தந்த மாநில முதல்வர்களை சந்தித்து வாழ்த்து பெற்றனர். இந்திய பார்வையற்றோர் கிரிக்கெட் அணியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒரே வீரர் நான் மட்டும் தான். மற்ற மாநிலங்களைச் சேர்ந்த பார்வையற்ற வீரர்களுக்கு பரிசுத் தொகை வழங்கப்பட்டுள்ள நிலையில், எனக்கு இதுவரை வழங்கவில்லை.

எனக்கு அரசுப்பணி வழங்க தமிழ்நாடு அரசு முன்வர வேண்டும். கனிமொழி எம்.பி., சட்டப்பேரவை உறுப்பினர் ஜீ.வி.மார்க்கண்டேயன் ஆகியோரிடம் முறையிட்டுள்ளேன். அவர்கள் எனக்கு உதவுவார்கள் என எதிர்பார்க்கிறேன் என்றார் அவர்.

# "உண்மையை தெரிந்துகொள்ள உதவும்" – 'ஆர்டிகிள் 370' படத்துக்கு பிரதமர் மோடி பாராட்டு

**ஸ்ரீநகர் : பிப். 21,**

**ஆதித்யா ஜம்பாலே இயக்கத்தில் வெளியாகவுள்ள 'ஆர்டிகிள் 370' திரைப்படம் மக்கள் உண்மையான தகவல்களை தெரிந்துகொள்ள உதவும் என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.**

ஜம்மு-காஷ்மீரில் பல்வேறு நலத்திட்டங்களை துவக்கி வைத்த பிரதமர் நரேந்திர மோடி மவுலானா ஆசாத் மைதானத்தில் நடைபெற்ற பிரம்மாண்ட பொதுக்கூட்டத்தில் உரையாற்றினார். தனது உரையின் இடையே, இந்த வாரம் திரையரங்குகளில் வெளியாக இருக்கும் 'ஆர்டிகிள் 370' படத்தைப்பற்றி குறிப்பிட்டார்.

அப்போது பேசிய பிரதமர் மோடி, "ஒரு காலத்தில் ஜம்மு - காஷ்மீரில் பள்ளிகள் எரிக்கப்பட்டன, இன்று பள்ளிகள் அலங்கரிக்கப்படுகின்றன. இன்று, சுகாதார வசதிகள் வேகமாக மேம்பட்டு வருகின்றன. 2014க்கு முன் ஜம்மு-காஷ்மீரில் 4 மருத்துவக் கல்லூரிகள் இருந்த நிலையில் தற்போது 12 மருத்துவக் கல்லூரிகள் உள்ளன.




ஜம்மு காஷ்மீரின் வளர்ச்சிக்கு 370வது பிரிவு மிகப்பெரிய தடையாக இருந்தது. பாஜக அரசு அதை நீக்கியுள்ளது. இப்போது ஜம்மு-காஷ்மீர் ஒட்டுமொத்த வளர்ச்சியை நோக்கி நகர்ந்து வருகிறது. 370வது சட்டப்பிரிவை ரத்து செய்ததால், தேர்தலில் பாஜக 370 இடங்களையும், தேசிய ஜனநாயக கூட்டணி 400 இடங்களையும் வெல்ல உதவுமாறு மக்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த வாரம் ஆர்டிகிள் 370 பற்றிய படம் ஒன்று வெளியாவதாக கேள்விப்படுகிறேன். மக்கள் உண்மையான தகவல்களை தெரிந்துகொள்ள இப்படம் உதவும் என்பது நல்ல விஷயம்" என்று தெரிவித்தார்.

ஆதித்யா ஜம்பாலே இயக்கத்தில் யாமி கவுதம், பிரியாமணி நடித்துள்ள 'ஆர்டிக்கிள் 370' படம் வரும் 23-ம் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது. ஜம்மு காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட சட்டப்பிரிவு 370 ரத்து செய்யப்பட்டது குறித்து பேசும் இப்படத்தின் ட்ரெய்லர் அண்மையில் வெளியாகி விவாதத்தை ஏற்படுத்தியது.

வரலாறு சினிமா

# இந்தி நடிகர் ரிதுராஜ் சிங் மாரடைப்பால் காலமானார்

**மும்பை : பிப். 21,**

**இந்தி நடிகர் ரிதுராஜ் சிங் மாரடைப்பால் காலமானார். அவருக்கு வயது 59. அவரது மறைவுக்கு நடிகர்கள் மனோஜ் பாஜ்பாய், சோனு சூட் உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.**



இந்தியில் பல்வேறு திரைப்படங்கள் மற்றும் சீரியல்களில் நடித்தவர் ரிதுராஜ் சிங். 'ஹம்ப்ட்டி ஷர்மா கி துல்ஹனியா', 'சத்யமேவே ஜெயதே 2', 'யாரியான் 2' உள்ளிட்ட பல்வேறு திரைப்படங்களில் நடித்துள்ளார். தமிழில் அஜித் நடித்த 'துணிவு' திரைப்படத்தில் ஒரு சிறிய கதாபாத்திரத்தில் தோன்றினார். இதுதவிர, ஏராளமான சீரியல்களிலும் ரிதுராஜ் நடித்துள்ளார். கடைசியாக 'இண்டியன் போலீஸ் ஃபோர்ஸ்' வெப் தொடரில் ஒரு கதாபாத்திரத்தில் நடித்திருந்தார்.

இந்த நிலையில், நேற்றி அதிகாலை 12.30 மணியளவில் ரிதுராஜ் சிங் மாரடைப்பால் உயிரிழந்தார். அவரது மறைவுக்கு இந்தி திரையுலகினர் பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

நடிகர் மனோஜ் பாஜ்பாய் வெளியிட்டுள்ள இரங்கல் பதிவில், "இது எப்படி உண்மையாக இருக்க முடியும்? கண்விழிக்கும்போது இப்படி ஒரு அதிர்ச்சிகரமான செய்தி. உன் ஆன்மா சாந்தி அடையட்டும் என் நண்பா ரிதுராஜ்" என்று கூறியுள்ளார்.

நடிகர் சோனு சூட், தனது எக்ஸ் பக்கத்தில் ரிதுராஜின் புகைப்படத்தை பகிர்ந்து இரங்கல் தெரிவித்துள்ளார்.

# கவுண்டமணியின் 'ஒத்த ஓட்டு முத்தையா' படப்பிடிப்பு நிறைவு – கோடையில் ரிலீஸ்

**சென்னை : பிப். 21,**

**கவுண்டமணி ஹீரோவாக நடிக்கும் 'ஒத்த ஓட்டு முத்தையா' திரைப்படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்துள்ளது.**

கவுண்டமணி கதையின் நாயகனாக நடித்துள்ள படம், 'ஒத்த ஓட்டு முத்தையா'. அரசியல், நகைச்சுவை திரைப்படமான இதை நடிகரும் இயக்குநருமான சாய் ராஜகோபால் இயக்கியுள்ளார். இவர் இதற்கு முன்பு, 'சுந்தரி நீயும் சுந்தரன் நானும்', 'கிச்சா வயசு 16' படங்களை இயக்கியுள்ளார்.


சசி ஃபிலிம்ஸ் தயாரிக்கும் இதில் யோகி பாபு, ராஜேஸ்வரி, சிங்கமுத்து, சித்ரா லட்சுமணன், மொட்டை ராஜேந்திரன் உட்பட பலர் நடித்துள்ளனர். மேலும் முக்கிய கதாபாத்திரங்களில் நாகேஷின் பேரன் கஜேஷ்,



மயில்சாமியின் மகன் அன்பு, சிங்கமுத்துவின் மகன் வாசன் கார்த்திக் ஆகியோர் நடித்துள்ளனர். சித்தார்த் விபின் இசை அமைக்கிறார். ஹெக்டர் ஸ்ரீதர் ஒளிப்பதிவு செய்துள்ளார்.

சென்னையில் நடந்துவந்த இப்படத்தின் படப்பிடிப்பு தற்போது முழுமையாக நிறைவடைந்துள்ளதாக படக்குழு தெரிவித்துள்ளது. இந்த ஆண்டு கோடை விடுமுறையில் இப்படத்தை திரைக்குக் கொண்டு வர படக்குழு திட்டமிட்டுள்ளது.

# ஜம்மு காஷ்மீரில் ரூ. 32,000 கோடி மதிப்பிலான திட்டங்கள் தொடங்கி வைத்தார் பிரதமர்





# எதிர்க்கட்சி துணைத் தலைவராக ஆர்.பி.உதயகுமாரை அங்கீகரிக்க கோரிய வழக்கு வாபஸ்

# வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி : ம.பி காங்கிரஸ் ஆலோசனைக் கூட்டத்தில் கமல்நாத் பங்கேற்பு




| சென்னை / புதுக்கோட்டை | 21.02.2024 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை
வரலாறு
நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

மிரா அல்பாசா , பிரான்சிய-இந்திய மதத் தலைவர் (பி.1878) (இ.1973)



நிராலா , இந்தியக் கவிஞர் (பி.1896) (இ.1961)



கருணாஸ் , தமிழக நடிகர், அரசியல்வாதி (பி.1970)



## இன்றைய நினைவு நாள்

ராணி சென்னம்மா , இந்திய விடுதலைப் போராட்ட வீராங்கனை (பி.1778) (இ.1829)



வி. கனகசபைப் பிள்ளை , ஈழத்து-தமிழகத் தமிழறிஞர் (பி.1855) (இ.1906)



ஜார்ஜ் எல்லேரி ஏல் , அமெரிக்க வானியலாளர் (பி.1868) (இ.1938)



## பன்னாட்டுத் தாய்மொழி நாள்